மனிதம் படைக்க...மார்க்க வழிகள்!

திருவருட்பேரவையின் சிறார்

கன்னியாகுமரி மாவட்ட திருவருட்பேரவைக்காக

அருட்பணி. அ. மரிய வின்சென்ட்

2011

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in



வருக...
சமய நல்லிணக்கத்தை வளர்ப்போம்!
உலக அமைதியை உருவாக்குவோம்!!
உயிர்களைப் போற்றிப் பேணுவோம்!!!
ஆக்க சக்திகளாக நம்மை மாற்றிடுவோம்...

கன்னியாகுமரி மாவட்ட திருவருட்பேரவை

பதிவு எண் : 7/11

ஆயர் இல்ல வளாகம், த.பெ. எண் - 17,

ஆசாரியள்ளம் சாலை

நாகர்கோவில் - 629 001

நூல் விபரம்

நூல் தலைப்பு	:	மனிதம் படைக்க _ மார்க்க வழிகள்
ஆசிரியர்	:	சுவாமி. அ. மரிய வின்சென்ட்
மொழி	:	தமிழ்
நூல் வகை	:	சமய நல்லிணக்கம் / நன்னெறி
முதல் பதிப்பு	:	2011
பிரதிகள்	:	5000
வெளியிடுபவர்	:	கன்னியாகுமரி மாவட்ட திருவருட்பேரவை
உரிமை	:	ஆசிரியருக்கு
நூல் அளவு	:	14 X 21 செ. மீ
எழுத்து	:	14 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	72+4
தாள்	:	ஆர்ட் பேப்பர் 130 ஜி. எஸ். எம்.
நூல் விலை	:	ரூ. 70 /-
வடிவமைத்து அச்சிட்டோர்	:	அசிசி ஆப்செட் அச்சகம், அசிசி வளாகம், நாகர்கோவில் - 1 போன் : 04652 - 231085

தொடர்பு முகவரி : சுவாமி. அ. மரிய வின்சென்ட்
ஒருங்கிணைப்பாளர்
கன்னியாகுமரி மாவட்ட திருவருட்பேரவை.
ஆயர் இல்ல வளாகம்.
த.பெ. எண் -17,
ஆசாரிபள்ளம் சாலை.
நாகர்கோவில் - 629 001.

உள்ளடக்கம்

எண்		பக்கம்
1.	திருவருட்பேரவையின் இலச்சினை	
2.	நூல் பற்றிய தகவல்	
3.	வாழ்த்துச் செய்திகள்	
	❖ ஆயரின் ஆசியுரை	-5
	❖ வெள்ளிமலை சுவாமிகளின் 'இறைவனை வேண்டுகிறேன்'	-6
	❖ மாவட்ட ஆட்சியர் மதுமதி அவர்களின் வாழ்த்து	-7
	❖ ஹாஜி. அகமத்கான் அவர்களின் வாழ்த்து	-9
	❖ அறிவர் ஜேம்ஸ் ஆர். டானியல் அவர்களின் பாராட்டுரை	-10
	❖ வள்ளலார் பேரவை சுவாமி பத்மேந்திரா அவர்களின் வாழ்த்து	-12
	❖ திரு. முகமது அலி அவர்களின் வாழ்த்து	-14
4.	நூல் முகம்	-15
5.	சிறார் அவையின் நோக்கம்	-19
6.	சிறார் அவைச் செயல்பாடுகள்	-20
7.	சிறார் அவை அமைப்பு முறை	-21
8.	கூட்டம் நடத்தும் முறை	-22
9.	உறுதி மொழி	-23
10.	சிறார் அவைப் பாடல்	-24
11.	பராமரிக்க வேண்டிய பதிவேடுகள்	-25
12.	பொது வழிபாட்டு முறைகள்	
	மாதிரி 1. அன்பே வாழ்வாக	-26
	,, 2. மனித நேயமே மனிதனின் நிறம்	-32
	,, 3. நம்பிக்கை ஒளி	-37
	,, 4. நன்மக்கள் பண்பு	-40
	,, 5. உண்மையான பக்தி	-43
	,, 6. உண்மை பக்தன்	-46
13.	பஜனைப் பாடல்கள்	-49
14.	முச்சமயச் சிந்தனைகள்	-51
15.	சான்றோர் வாக்குகள்	-53
16.	அருளாளர்கள்	-56
17.	பல்சமய தத்துவங்கள்	-61
18.	உலக சமயங்களின் அடையாளங்கள்	-62
19.	ஆண்டுத் திட்டம்	-67
20.	மாணவர் சேர்க்கைப் படிவம்	-68
21.	மாணவரின் விபரங்கள்	-69
22.	தமிழ்த்தாய் வாழ்த்து	-70
23.	நாட்டுப்பண்	- 71

DIOCESE OF KOTTAR

Bishop's House,
P.B. No: 17, Nagercoil - 629 001.
Kanyakumari District, Tamil Nada, India.
Off : + 91 - 4652 - 278343, 279152, 279933
Per : + 91 - 4652 - 278868
E-mail : peterremigius@yahoo.co.in

Most Rev. Peter Remigius, D.D
Bishop of Kottar

10.09.2011

ஆசியுரை

அன்பினால்தான் உலகம் சுற்றிக் கொண்டு இருக்கிறது. அனைத்துச் சமயங்களும் அன்பையே போதிக்கின்றன. ஆனால் இன்றைய சமுதாயத்தில் போட்டிகளும், பொறாமையும், வன்முறைகளும் நிறைந்து காணப்படுகின்றன. இப்படிப்பட்ட உலகில் மாணவர்களின் மனதில் அன்பு மலர்ந்து, மனித நேயம் வளர வேண்டும்.

பரந்து விரிந்துள்ள இந்தப் பூமியில் வாழும் சிறார்களுக்கும், அவர்களின் பெற்றோர்க்கும், உற்றார் உறவினர், ஊரார், நாட்டார், ஏன் உலகத்தவர் அனைவருக்குமே தேவையான ஒன்றைத் தேர்ந்தெடுத்து உலக சமுதாயச் சீர்திருத்த முயற்சியினைக் கன்னியாகுமரி மாவட்ட திருவருட்பேரவை தனது இணை அமைப்பான சிறார் பேரவை வழியாக நடைமுறைப்படுத்த முன்வருவதைக் கண்டு அகமகிழ்கின்றேன். படிக்கின்ற மாணாக்கர் நடுவே சாதி, சமய பேதமற்ற ஒரு நிலையை உருவாக்கிட முனைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட திருவருட்பேரவைக்கும் மேலும் அதற்கென்று துணை ஏடாக **"மனிதம் படைக்க... மார்க்க வழிகள்"** என்றபெயரில் ஒரு கையேட்டை உருவாக்கித் தந்த ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை அ. மரிய வின்சென்ட் அடிகளாருக்கும் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

தனி மனித வாழ்வுக்கும், குடும்ப வாழ்வுக்கும், கூட்டு வாழ்வுக்கும் சமய நல்லிணக்கம் மிக மிகத் தேவை என்பதை உணர்ந்து, வன்முறையும் தீவிரவாதமும் அடியோடு அகன்று போகவும், மானுட அன்பு சமத்துவப் பண்பில் தெய்வீக அன்பாக மாறவும், வாழ்வில் சிறார் யாவரும் நடமாடும் பல்கலைக்கழகமாக மாறவும் இந்நூல் பேருதவியாக இருந்திட ஆசி வழங்குகிறேன்.

கிறிஸ்துவில் அன்புள்ள,

பீட்டர் ரெமிஜியுஸ்
கோட்டாறு மறைஆயர்,
தலைவர், திருவருட்பேரவை

Ph : 04651-37411

ஸ்ரீ விவேகானந்த ஆசிரமம்

வெள்ளிமலை, கல்படி அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 204.

இறையருளை வேண்டுகிறேன்

எங்கும் நிறைந்தவன், எல்லாம் வல்லவன் இறைவன்.

தாயை விட அன்பு காட்டுபவன் இறைவன்.

மனிதர்களுக்கு மட்டுமின்றி உலக உயிர்கள் அனைத்திற்கும் தாயும் தந்தையும் ஆனவன் இறைவன்.

அன்புடன், பக்தியுடன், ஏக்கத்துடன் அழைத்தால் நாம் விரும்பும் உருவில் காட்சி அளிக்க வல்ல கருணை வடிவானவனே இறைவன்.

உலகில் ஒவ்வொரு மதத்தினருக்கும் தனித்தனி கடவுள் என்று கூறுவது மதியீனம்.

பல நதிகள் பல கிராமங்கள் வழியாகப் பாய்ந்தாலும் இறுதியில் கடலையே சென்று சேர்வது போன்று அனைத்து சமய வழிபாடுகளின் மூலம் நாம் அடைய நினைப்பது, அடைவது இறைவனையே.

இக் கருத்தினையே சுவாமி விவேகானந்தர் சிகாகோ மாநாட்டில் கூறி அனைவரது கருத்தையும் கவர்ந்தார்.

உன் கடவுள் தாழ்ந்தவர், என் கடவுள் உயர்ந்தவர் எனக் கூறுவது மடமை. ஏனெனில் கடவுள் ஒருவரே.

இதை உணர்ந்தால் நமக்குள் சண்டை சச்சரவு நீங்கி சகோதர பாசம் பெருகும். ''வசுதைவக குடும்பம்' உலகம் முழுக்க ஒரே குடும்பம் என்ற நிலை வரும்.

இத்தகைய ஒரு நிலையை உருவாக்கி உலகில் சாந்தியும், சமாதானமும் நிலவப் பாடுபடுவது அனைவரின் கடமை.

சிறு வயதிலிருந்தே இத்தகு சிறந்த, பண்பான கருத்துக்களை மாணவர்களிடையே பரப்பவே சிறார் அவை. அதற்கு உறுதுணை செய்ய ***மனிதம் படைக்க.... மார்க்க வழிகள்*** எனும் இச்சிறு கையேடு.

இதனைப் பயன்தரும் வகையில் பக்குவமாகப் படைத்த அருள்தந்தை மரிய வின்சென்ட் அடிகளாரின் பணி போற்றுதற்குரியது. இக்கையேடு மனிதகுலம் சாந்தியும், சமாதானமும் பெற வழிகாட்டியாக விளங்க இறையருளைப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ குருஹேறாராஜ் பணியில்,

[சுவாமி [illegible]]

கன்னியாகுமரி மாவட்டம்
நாகர்கோவில் - 629 001.
அலுவலகம்:(04652) 279090, 279555
வீடு:(04652) 260666, 260999
பேக்ஸ்:(04652) 260999
மின் அஞ்சல்: collrkkm@tn.nic.in

சோ. மதுமதி, இ.ஆ.ப
மாவட்ட ஆட்சித் தலைவர்

வாழ்த்துரை

"அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" என்றார் வள்ளுவர்.

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்"
என்றார் வள்ளலார்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றார் கணியன் பூங்குன்றனார்.

மனித நேயத்தின் முக்கியத்துவத்தினை உணர்த்திய இவர்களைப் போன்ற ஒருசில உத்தமர்கள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும், அன்புடன், அருளுடன், தன்னலமற்ற பொதுநலத்துடன், மனித நேயத்துடன் இருந்த காரணத்தால்தான் மனித குலம் இன்றளவும் தழைத்து நிற்கிறது. அத்தகைய மனித நேயமிக்க உத்தமர்கள் தற்காலத்திலும் ஆங்காங்கு இருக்கத்தான் செய்கிறார்கள். இன - மத - தேச வேறுபாடுகளைக் கடந்து, மனிதனை மனிதனாக மதிக்கும் மனித நேயம் மனித குலத்துக்கு நம்பிக்கையைத் தருகிறது. கல்வியறிவு, செல்வச் செழிப்பு, பட்டம், பதவி ஆகியவை பெருமளவில் ஒருவருக்குக் கிடைத்திருந்தாலும், அவற்றுடன் மனித நேயம் என்பது அவரிடம் இல்லை என்றால், சேர்ந்துள்ள மற்ற வசதிகளால் சமுதாயத்துக்கு எந்தப் பயனும் இல்லாமற் போய்விடும்! தற்போது நாகரிகம் வளர வளர பொருளாதாரப் போராட்டத்தில் ஈடுபட்டு மனிதனிடம் மனித நேயம் குறையத் தொடங்கியுள்ளது.

மதங்கள் அனைத்தும் அன்பையே முதன்மைப்படுத்தி போதிக்கின்றன. அன்பே கடவுள் என்கின்றன. அனைத்து உயிர்களிடத்தும் அன்பு

செலுத்தும் பெரியோர்கள், ஞானிகள், சித்தர்கள் வாழ்ந்த நம் தேசத்தின் இன்றைய நிலையோ கவலை அளிப்பதாக உள்ளது. பொருளாதார ஏற்றத்தாழ்வு மனித நேயத்தை அழிக்கும் விஷக்கிருமியாக வளர்ந்து வருகிறது. இந்நிலை மாற, எதிர்கால சமுதாயத்தை வலுவாக உருவாக்கிட பள்ளிகளிலேயே குழந்தைகளுக்கு அன்பு, நேசம், பிறருக்கு உதவும் தன்மை போன்றவற்றை எடுத்துக்கூறி வளர்க்க வேண்டும். பெரியோர்களை மதிக்கச் செய்ய வேண்டும். பள்ளிகள் வெறும் பாடங்களைப் போதிக்கும் கூடங்களாக அல்லாமல் பாடத்துடன் மனித நேயத்தையும் போதிக்கும் ஒரு கல்விச்சோலையாக மாறவேண்டும். நமது சான்றோர்கள் எழுதிய புத்தகங்களின் சாராம்சங்கள் மற்றும் அவற்றிலுள்ள நல்ல விஷயங்களை அவர்களுக்கு புரிய வைத்தால் எதிர்கால சமுதாயம் மனித நேயம் மிக்க சமுதாயமாக மாறும்.

இத்தகைய நற்பண்புகளை விதைக்கும் ஒரு கருவியாக அருட்தந்தை அ. மரியவின்சென்ட் அடிகளார் எழுதியிருக்கும் இந்நூல் அமைந்திருக்கிறது. அவரது முயற்சிகளுக்கு பாராட்டு.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற தத்துவக் கோட்பாட்டின்படி மக்கள் வாழ்ந்தால் மனித நேயம் தழைத்தோங்கும். இவ்வாறான உலகம் படைக்க பள்ளிகள்தோறும் சிறார் அவை அமைக்க முனைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட திருவருட்பேரவைக்கு எனது பாராட்டுதல்களை உரித்தாக்கிக் கொள்கிறேன். மேற்படி சிறார் அவையில் அதிக அளவில் மாணவ மணிகளை ஈடுபடுத்தி இம்மண்ணுலகில் மனிதம் படைத்திட இந்நூல் உறுதுணையாக இருக்கும் என நம்புகிறேன்.

2/10/11

மாவட்ட ஆட்சித் தலைவர்,

கன்னியாகுமரி.

ஹாஜி M. அகமத்கான்
மூத்த வழக்கறிஞர்
நிறுவனர், திருவருட் பேரவை

398, ஆலன் தெரு, கோர்ட் ரோடு,
நாகர்கோவில் - 1
கைபேசி : 9443120242, வீடு : 04652 279602

வாழ்த்துக்கள்

சமய நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் முறையில் திருவருட்பேரவை சிறார் அமைப்பை நிறுவியுள்ளது. இதன் மூலம் நம் இளைஞர்களுக்கென்று ஒரு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்க முடியும். இளைஞர்களின் மத்தியில் சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தி சிறந்த ஒரு தேசத்தை உருவாக்க முடியும். இளைஞர்கள் இந்த தேசத்தின் சொத்து. அவர்கள் இந்த நாட்டின் தலைவர்களாக வரவேண்டும். அதற்குரிய பணிகள் தான் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சுவாமி விவேகானந்தர் சொன்னார், என்னிடம் 100 இளைஞர்களைத் தாருங்கள் நான் இந்த தேசத்தை மாற்றிக் காட்டுகிறேன்". இது போன்ற இளைஞர்களை உருவாக்குவதுதான் நம்முடைய நோக்கம். இதன் மூலமாக நாம் எல்லா மக்கள் மத்தியிலும் சமய நல்லிணக்கத்தை சிறப்பான முறையிலே எடுத்துக்காட்ட முடியும். மதத்தால் வேறுபட்டிருக்கும் மக்களை ஒன்று சேர்ப்பதற்கு இது ஒரு நல்ல வழிமுறையாகும்.

ஹாஜி M. அகமத்கான்
நிறுவனர், திருவருட் பேரவை

ஜி. ஜேம்ஸ் R. டானியல்
(பொதுச் செயலர், திருவருட்பேரவை
மதிப்புறு வருகை பேராசிரியர்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்)

60-2, டேனியல் வளாகம்,
நீர் தேக்கி அருகில், நாகர்கோவில் - 1
வீடு : 04652 - 279208

கருத்தும் பாராட்டும்

இளமையில் கல். இளம் பருவத்தில் குழந்தைகளின் உள்ளத்தில் பதிக்கப்படும் கல்வி, வாழ்நாள் முழுவதும் அவர்களுக்கு வழிதவறா வழிகாட்டியாக மாறிவிடுகிறது. பசு மரத்தாணிபோல் பதியும் கல்வி இளமைக் கல்வி. எனவேதான் நம் மூதாதையர்கள் இளமையிலேயே நல்ல மதிப்பீடுகள், முற்போக்குச் சிந்தனைகள், மனித மேம்பாட்டு எண்ணங்கள், மனுக்குல விடுதலைக்கான கோட்பாடுகள்-இவைதனை பாடத்திட்டங்களாக வகுத்துத் தந்தனர். மாணவர்களும் பயின்று பயனடைந்தனர். தொடர்ந்து பயனடைந்து வருகின்றனர்.

ஆனால் இன்று நாம் வாழும் உலகம் பல்சமயச் சூழலை மையமாகவைத்து இயங்கும் ஓர் உலகம். இவ்வாறு பல்வேறு நம்பிக்கைகளை மையமாகக் கொண்டு மனுக்குல மீட்பு, மனுக்குல மேம்பாடு, மனுக்குல நல்வாழ்வு எனத் தம் பயணத்தை மேலெடுத்துச் சென்றாலும், ஒவ்வொரு சமயத்துக்குள்ளும் மிகக் குறுகிய வட்டத்துக்குள்ளே சமயத்தின் பொருளைத் தேடுவோர், மனிதன், மனுக்குலம், மதம், மனிதநேயம் என்ற பெருவட்டத்துக்குள்ளே நேரிய நோக்கோடு, தூரப் பார்வையோடு மானுட நேயத்தை முன்னெடுத்துச் செல்வதை விட்டுவிட்டு, தன் சமயம் காட்டும் வழி மட்டுமே சரியான வழி, தன் சமயமின்றி பிறசமயங்களால் பயனில்லை, தன் சமயம் எல்லோர் மீதும் திணிக்கப்படவேண்டும், என்ற மிகக்குறுகிய கண்ணோட்டத்துடன் செயல்படுவதால், சமயப் பார்வையை வெளிக் கொணர்வதால், இன்று சமயப் பிணக்குகள் சமூகப்பிணக்குகளாக மாறிவருகின்றன. இதனால் நாடுகளுக்கிடையே போர், குழுக்களுக்கிடையே போட்டி, இனங்களுக்கிடையே சண்டை, ஆக நமக்கு வாழ்வளிக்க வேண்டிய சமயத்தின் பெயரால் வாழ்வு இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அண்மைக் காலத்தில் சமயத்தின் பெயரால் நடைபெறும் நிகழ்வுகள், நடுவுநிலையோடு சிந்தித்துச் செயல்படும் மக்களை கடுந்துயரத்திற்கு ஆளாக்கியுள்ளது. நாம் விரும்புகிறோமோ இல்லையோ, அப்பட்டமான உண்மை, சமயம் மனித அழிவின் கருவியாக மாறியுள்ளதோ என ஐயுறத் தோன்றுகிறது. வன்முறையின்மையைக் கருவியாகக் கொண்டு அன்பு, அமைதி, அறம்

இம் முப்பெருண்மைகளுக்கு வழிகாட்ட வேண்டிய சமயம், வெறுப்பு, வெறி, போர் (மறம்) என்ற மூன்று அழிவு யதார்த்தங்களுக்கு நம்மை இட்டுச் செல்லும் துர்ப்பாக்கியமான நிலைமையை இன்று நாம் சந்தித்து வருகின்றோம்.

அடுத்த தலைமுறைக்காகச் சிந்திப்பவன்தான் ஞானி, அறிஞன், சமூக ஆர்வலன், ஏன் நல்ல சமயப்பற்றாளன், இறைமக்கள் கூட. நாளைய உலகம் அன்பு, அமைதி, அறம் தழைக்கும் உலகமாக இருந்தால்தான் நம் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும் அமைதியோடு, நல் இணக்கத்தோடு, ஒருவரையொருவர் மனிதர்கள் என்ற புரிதலோடு உறவு கொண்டு, தமது வளமான வாழ்க்கையைச் செழிப்பாக அமைக்க முடியும். இதைத் தரவேண்டியது இன்றைய மூதாதையரான நமது சமயக் கடமை, சமூகப் பொறுப்பு. இந்தச் சமூகப் பொறுப்பை நன்குணர்ந்த கன்னியாகுமரி மாவட்டத் திருவருட்பேரவை, எல்லா சமயங்களும் போதிக்கும் அடிப்படை உண்மைகளை ஒவ்வொரு நாளும், அல்லது வாரத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு பள்ளியிலும் நடைபெறும் காலைப் பொதுத் தொழுகையின் போது, அனைத்துச் சமய நூற்களிலிருந்து இப்பொதுமையை முன்னிறுத்தும் இறைவேண்டுதல் செய்வது, எல்லா சமயச் சிறார்களும் ஒருவரையொருவர் நன்கு புரிந்துணர்வதோடு, தன் சமயம்போல் தான் பிறசமயங்களும் மக்கள் நல்வாழ்வுக்காக நல்வழிகாட்டுகின்றன என்பதை அனுபவரீதியாக உணர்ந்து, ஒருவர்பால் ஒருவர் மதிப்பும் மாண்பும் கொண்டு வாழ வழிவகுக்கும்.

தன் சமயத்தை நன்குணர்ந்தவன் பிறசமயத்தைப் புரிந்து கொள்கிறான். பாராட்டுவான். இணைப் பயணத்துடன் மனுக்குல மேம்பாட்டுக்காகப் பணியாற்றுவான். ஆனால் அதே நேரத்தில் இப்புரிதல், உணர்தல் ஒவ்வொரு சமயமும் காட்டும் நல்ல மனித மதிப்பீடுகளை இளம் உள்ளங்களில் பிஞ்சு உள்ளங்களில் ஆழப் பதிப்பதற்குப் பெரிதும் உதவும்.

இந்த நூலிலே தரப்பட்டுள்ள பல்வேறு சமயத் திருநூல்களின் ஒன்றித்த வாசிப்புகளும், உள்வாங்கிக்கொள்ளுதலும் பச்சிளங் குழந்தைகள் இப்பாரின் வளர்ச்சிக்குத் தேவையான மானுட மதிப்பீடுகளை இளமையிலே பெற்று, தமது இனிய வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள பெரிதும் உதவும். இதனை நல்லமுறையில் ஆக்கித்தந்துள்ள அருட்தந்தை அ. மரிய வின்சென்ட் அடிகளாரின் முயற்சி பெரிதும் பாராட்டிற்குரியது.

இது திருவருட்பேரவையின் சமூக சமய நல்லிணக்கப் பணியின் தொடக்க முயற்சி. இதனைத் தொடர்ந்து பல்சமய மனித மதிப்பீட்டுக் கல்வித் திட்டத்தையும் அடுத்தக் கல்வியாண்டு முதல் நடத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பள்ளி பாடத்திட்டத்திலும் இது இடம்பெறும்.

சமயங்கள் தரும் நல்ல மதிப்பீடுகள் நல்ல மனிதர்களை, மனிதம் தோய்ந்த மனிதர்களை உருவாக்கட்டும். அன்பு, அமைதி, அறம் இம்மண்ணில் தழைத்தோங்கட்டும்!

இ. ஜேம்ஸ் R. டானியல்
(பொதுச் செயலர், திருவருட்பேரவை

அருட் பெருஞ் சோதி
தனிப் பெருங் கருணை

அருட் பெருஞ் சோதி
அருட் பெருஞ் சோதி

வள்ளலார் பேரவை

93/64, பயோனியர் தெரு, வடசேரி, நாகர்கோவில் - 629 001
கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு.
E.mail : vallalar.k.k@gmail.com, Cell : 94431 70274

வாழ்த்துரை

சாதியும் மதமும் சமயமும் காணா
ஆதி அநாதியாம் அருட்பெருஞ்சோதி - வள்ளலார்

சாதியிலும், மதத்திலும், சமயத்திலும் ஆழ்ந்து வாழ்ந்துகொண்டு இருப்பவர்கள், ஒருபோதும் இறைவனின் உண்மையான தரிசனத்தை காணமாட்டார்கள் என்று வள்ளலார் போதிக்கின்றார்.

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின் - 96 - திருவள்ளுவர்

வாழ்க்கையில் நல்லவை நாடி இனிய சொற்களைப் பேசி வந்தால் தீயவை தேய்ந்து அறம் வளரும். இளைய தலைமுறைகள் மேற்கண்ட திருவள்ளுவர் குறளின்படி வாழ கற்றுக்கொள்ள போதிக்க வேண்டும்.

மனிதனின் முழுமை வளர்ச்சிக்கும், வாழ்க்கையின் தரத்தை நிர்ணயிக்கின்ற காலத்தையும் தருகின்ற தருணம் இளமைப் பருவகாலம்.

இப்படிப்பட்ட இளமைப்பருவ வாழ்க்கை கிடைப்பது பள்ளியில் பயிலும் காலமாகும். மன அமைதிக்கும், உடல் உறுதிக்கும், அறிவின் வளர்ச்சி முதிர்ச்சிக்கும் வழிகாட்டும் சாலையும் பள்ளி தான். பள்ளிகளில் திருவருட்பேரவை சிறார் கிளை அமைப்பை ஏற்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கும், தேசப்பற்றின் ஒற்றுமைக்கும், மனித நேயத்திற்கும் தரத்தை உயர்த்துகின்ற கல்வியாக திருவருட்பேரவை செயல்பாடு அமைந்துள்ளது.

மனிதப் பிறப்பின் அர்த்தத்தை உணர்ந்தால், நம்மை சாதியாலும், சமயத்தாலும் பிரித்துப் பார்க்கக்கூடிய குறுகிய மனப்பான்மை நம்மிடத்திலிருந்து அகன்றுவிடும்.

மனித பிறப்பு ஒன்றை பெற்றேன்
பிறப்பால் அன்பை கொண்டு வளர்ந்தேன்
நேசமிகு கருணை பிறருக்கு தந்தேன்
ஆன்மநேய உயிர் இரக்கத்தி கலர்

- ப.மெந்திரா

மேற்கண்ட வாக்கியத்தின்படி மனித பிறப்பில் வாழ்ந்தால், எல்லோருக்கும் இன்பம், தனக்கு பேரின்பம்.

எவ்வழி மெய்வழி என்பன ஆகமம்

அவ்வழி எனக்கு அருளிய அருட்பெருஞ்சோதி - வள்ளலார்

சிறு பருவத்திலேயே மனித நேயத்தின் தத்துவத்தை பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு பாடநூல் ஒரு பகுதியாக வகுப்பு நடத்தி ஒருமைப்பட்ட மனதில் நிலைநிறுத்தினால் வருகின்ற காலங்களில் நிச்சயமாக மத பேத உணர்வைத் தாண்டி நம்மவர் என்ற உணர்வோடு நாம் கூடி வாழலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவருட்பேரவையினர் மனித நேய நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து பிறருக்கு சுட்டிக்காட்டிக் கொண்டு வருகின்றார்கள்.

அன்பு, இரக்கம், தயவு, கருணை ஆகியவற்றின் உட்பொருள் அறிந்து வாழ, திருவருட் பேரவை சிறார் கல்வி நாட்டிற்கு மிக அவசியமானதாக இருக்கின்றது.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு

மேற்கண்ட திருவள்ளுவர் குறள் மனித நேயத்தையும், ஆன்ம நேயத்தையும், சமய நல்லிணக்கத்தையும், பேரின்பத்தையும், இறைவன் ஒருவரே தர இயலும் என்ற தத்துவத்தை உள்ளடக்கி உணர்த்துகிறது என்று வள்ளலார் திருவ ருட்பாவில் போதித்து உள்ளார்கள்.

சமுதாயத்தில் சமத்துவமும், மனித நேயத்தில் சமய நல்லிணக்கமும் மனிதன் வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

"ஆருயிர் அன்பு" என்ற பாடத்தை தமிழக அரசு பள்ளிப் பாடத் திட்டத்தில் அமைத்து இளைய தலைமுறை மனதில் உறுதிப்படுத்த வேண்டும்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு

திருவள்ளுவர் குறளின் தத்துவத்தின்படி பள்ளிப்பருவ மாணவ, மாணவிகளுக்கு "ஆன்ம நேய கண்ணாக திருவருட்பேரவை சிறார் அமைப்பு" ஒளிர் விடும்.

திருஅருட்பிரகாச வள்ளலார் உணர்த்திய ஆன்ம நேய ஒருமைப்பாட்டு அறவழியில்

திருவருட்பேரவை சிறார் அமைப்பு வாழ்க! வளர்க!!

அன்புள்ள,

சுவாமி பத்மேந்திரா

Lion H. முகம்மது அ PDG
செயலாளர்,
முஸ்லீம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு
மற்றும் மாவட்டத் திருவருள் பேரவை

வாழ்த்துகிறேன்

செழிப்பும் செழுமையும் நிறைந்த செம்மொழித் தமிழ் நாட்டின் கடைக்கோடி கன்னியாகுமரி. வானத்தில் வெள்ளி முளைத்தது போல் வந்துள்ள அமைப்புதான் திருவருள் பேரவை. சிறப்பொக்கும் இந்த மாவட்டத்தில் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று உரக்கக் கூறி சாதியும் மதமும் பேதமைப் பிசாசுகள் என்று ஒதுக்கி, சமய நல்லிணக்கத்தின் மாண்பினை மக்களுக்கு உணர்த்தி வருகிறது இம்மாபெரும் இயக்கம். பிஞ்சு நெஞ்சங்களைக் குறிவைத்துத் தனது சமய நல்லிணக்கக்கோட்பாட்டை அவர்கள் அறிந்திடும் வண்ணம், நூல் ஒன்று மலர இருப்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

அமுதமலர் வாய் திறந்து அமுதமொழி தமிழில் அம்மா என்றழைக்கும் அந்தக் குழந்தை வளர்கிறது. வளர்ச்சி வயதை எட்டுகிறது. இது தொடக்கம். குழந்தை மேலும் வளர்கிறது. 10 வயதையும் எட்டிவிடுகிறது. இந்த இடைப்பட்டக் காலத்தில் அந்தக் குழந்தையின் உள்ளத்தில் இடப்படும் எண்ணங்களுக்கு அளவே இல்லை. அனைத்து எண்ணங்களும் அலைபாயும் எண்ணங்களே. இஃது உச்சநிலை எய்தும் போது நிலை தடுமாறுகிறது. வழிமாறுகிறது. தடம் புரள்கிறது. இந்த நேரத்தில் அதற்குத்தேவை நெறியான வழிகாட்டுதல்களும் நெஞ்சைத் தொடும் அறிவுரைகளும் தாம்.

திருவருள் பேரவை வழிகாட்டுகிறது - சமய நல்லிணக்கம் என்ற அற்புதமான அறிவுரையைத் தன் வெளியீட்டின் வாயிலாக அழகழகாய் எடுத்தியம்புகிறது. இந்நூல் வாயிலாக சமய நல்லிணக்கக் கருவூலங்களைச் செதுக்கி இருக்கும் அருள்தந்தை அ. மரிய வின்சென்ட் அடிகளாருக்கு நெஞ்சம் நிறை பாராட்டுகள்.

விளைநிலத்தில் வித்திட்டால் விளைவது நற்பயிரே! சமய நல்லிணக்கம் என்ற விதை ஓங்கிவளரட்டும். இந்த மாவட்டம் அமைதிப் பூங்காவாகிட அதன் மூலம் சிறார்களும் தம் பங்களிப்பைப் பகிர்ந்து கொள்ள நெஞ்சார வாழ்த்துகிறேன்.

Lion H. முகம்மது அலி PDG
மாவட்டத் திருவருள் பேரவை

நூல் முகம்

சமயங்களைக் கடந்து மனிதத்தை மதித்து, சகோதர உணர்வை இதயத்தில் விதைத்து, பிரபஞ்சத்தை நேசித்து புதிய சமுதாயம் படைக்கத் துடிக்கும் இளைய சமுதாயத்திற்கு வளம் சேர்க்கும் நோக்கில் பலன் தர வருகிறது குமரிமாவட்ட திருவருட்பேரவையின் சிறார் அவை. இச்சிறார்களுக்கான வழிகாட்டும் நூல்தான் **"மனிதம் படைக்க ... மார்க்க வழிகள்"** என்னும் இக்கையேடு.

வரலாற்றில்....

காலச்சுவடுகளில், மனித வரலாற்றின் படிகளில் இறங்கிப் பார்த்தால், கரடுமுரடான மனிதரைப் பக்குவப்படுத்துவதற்கான விழுமியங்களின் பிறப்பிடமாகச் சமயங்கள் பிறந்திருக்கின்றன, வளர்ந்திருக்கின்றன. தனி மனித வாழ்வு குழுவாழ்வாக மாறிய சூழல் தொழிலை மையப்படுத்தி, பிறப்பை மையப்படுத்தி சாதிகள், சமயங்கள் உருவெடுத்தன.

இன்றையச் சூழல்...

காலச்சக்கரத்தின் சுழற்சியில் பிறந்த சமயமும், சாதியும் மானிடருக்குச் சிறைகளாய் மாறிய உண்மையை உணர வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளோம். இன்றைய சூழ்நிலையில் இயற்கையின் சீற்றங்கள், சமயத்தின் பெயரால் தீவிர அநீதங்கள், மேலும் உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் போன்ற பொருளாதார கோட்பாட்டால் நாடுகளிடையே போட்டிகள் , நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளால் "யார் பெரியவன்" என்ற போராட்டங்கள். இதன் விளைவாக உறவுகள் மறைந்து தன்னையே மையப்படுத்தி வளரும் வாழ்க்கை முறை

இன்றைய மனித சமுதாயத்தில் புரையோடிப்போயிருக்கும் தீமைகள், வன்முறைகள், தீவிரவாதங்கள் இவற்றிற்கெல்லாம் அடிப்படையான காரணம் மனிதர்களிடம் நற்பண்புகள் குறைந்து விட்டதும், தீமையைக் கைபிடிப்பவன் அந்தத் தீமையினாலேயே அழிந்து விடுவான் என்பதை உணர்ந்து கொள்ளாததுமே ஆகும்.

சமய, சமூக, அரசியல் தளங்களில் பணியாற்றுபவர்கள் தமது சக மனிதரை எந்தவிதமான தளங்களிலும் வேற்றுமைப்படுத்தி கீழ்மைப்படுத்திப் பார்க்கக்கூடாது. இந்தப் பாகுபாடற்ற நிலையை வளர்த்து பள்ளிப் பருவத்தில் மாணவர் இதயங்களில் பிரிவினைச் சுவர் கட்டப்படாமலிருக்கவும் அன்பென்னும் பாலத்தால் அனைவரையும் இணைக்கவும், **சமயங்களின் மையம் மனித நேயமே** என்ற மாண்பினை சமுதாயத்தில் நிஜமாக்கிடவும், நற்பண்புகளையும், ஆன்மீக நற்சிந்தனைகளையும் பள்ளிப் பருவத்திலேயே வளர்த்துக் கொள்வதால் வன்முறையற்ற, அமைதி நிறைந்த ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இன்றைய மாணவர்கள் வருங்கால உலகின் தலைவர்கள் ஆகையால் நற்குணங்களும், நல்ல பழக்கங்களும், நற்சிந்தனைகளும் கொண்டவர்களாக மாணவர்கள் உருவாக "**மனிதம் படைக்க – மார்க்க வழிகள்**" என்னும் பல்சமய மாணவர் கையேடு ஒன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் பயன்படுத்த உருவாக்கப்பட்டுள்ளது.

இன்றைய உலகில் **“மனித நேயமும், சமய நல்லிணக்கமும், உலக சகோதரத்துவமும், அன்பும், அமைதியும்”** மலர வேண்டும்.

“இறைவன் முன் அனைவரும் சமம், நாம் அனைவரும் இறைவனின் பிள்ளைகள்”. “மனித உறவில் நமது உறவு வட்டத்தை எவ்வளவு பெரிதாக்க முடியுமோ, அந்த அளவிற்கு ‘நான்’ என்பதைக் கடந்து நிற்க வேண்டும்”.

நம் முன்னாள் இந்திய முதன்மைக் குடிமகன் **உயர்திரு. ஏ.பி. ஜே. அப்துல் கலாம்** அவர்களிடம் பேட்டி ஒன்றில் “நீங்கள் விஞ்ஞானி ஆகியிராவிட்டால் என்னவாகி இருப்பீர்கள்?” என்று கேட்டபொழுது “ஆசிரியராகி இருப்பேன்” என்று பதிலளித்தார். பள்ளிகள்தான் மாணவர்களைப் பக்குவப்படுத்தும் பள்ளிவாசல்கள். பள்ளிப் பாடங்கள் ஏட்டுச் சுரைக்காய் மட்டுமல்ல, மனிதத்தின் மேன்மையும், சமயங்களிடையே நல்லிணக்கமும் வளர வாழப் பழக்கப்படுத்த வேண்டும்.

நிறைவாக...

“இறைத்தேடல் என்பதே ஆன்மீகத்தின் ஆணிவேர்!”. சமய உரையாடலின் சாரம் என்ற தத்துவத்தில், அவரவர் சமயத்தில் பெற்ற ஆழ்ந்த மெய்யுணர்வைப் பகிர்ந்து சமயங்களிடையே நல்லுறவையும், சகோதரத்துவ அன்பையும் அமைதியையும் வளர்க்கும் நோக்கத்தில்-

பன்மையில் சிறந்த பாரதத்தில் - பல்சமய மணம் கமழச் செய்து,
சமூக நல்லிணக்கம் உருவாகிடச் செய்யும் பணிகளில்
பரம்பொருளாம் இறைவனின் திருவருள் நம்மை நிரப்பட்டும்.
வாருங்கள் சமய நல்லிணக்கத் தடங்களில் பயணிப்போம்!
பார்போற்றும் பாரதத்தில் பண்போடு வாழ்ந்து
ஏற்றத்தாழ்வற்ற இனிய சமுதாயம் காண்போம்!!!

நன்றிகள்...

இந்நூல் உருவாகக் காரணமாக இருந்த அனைவருக்கும், சிறப்பாக முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. **இராஜேந்திர ரத்னூ** IAS எம் அன்பு ஆயர் டாக்டர் **பீட்டர் ரெமிஜியுஸ்** மற்றும் **திருவருட்பேரவை உறுப்பினர்** ஒவ்வொருவருக்கும் என் இதய நன்றி. வாழ்த்துரை எழுதிய அனைவருக்கும் நன்றி.

சுவாமி அ. மரிய வின்சென்ட்
ஒருங்கிணைப்பாளர், திருவருட்பேரவை.
கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்ட

திருவருட்பேரவையின் சிறார் அவை

நோக்கம்:

இளம் உள்ளங்களில்
சமய நல்லுறவையும்,
உலக சகோதர மனப்பான்மையையும்
உயிர்களிடத்தில் அன்பையும்
உலக அமைதியையும்
உருவாக்கி
வளர்த்தெடுப்பதே
கன்னியாகுமரி மாவட்ட
திருவருட்பேரவை -
சிறார் அவையின் நோக்கமாகும்.

சிறார் அவையின் இயக்கச் செயல்பாடுகள்

- கல்வி ஆண்டின் தொடக்கத்தில் சிறார் அவையைப் புதுப்பித்து, புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல்.
- ஆண்டுத் தொடக்கத்தில் ஆண்டுத் திட்டம் வகுத்து, திட்டமிட்டு செயல்படல். அதன் நகலை ஒருங்கிணைப் பாளருக்கு அனுப்புதல்.
- மாதம் ஒருமுறை சிறார் அவைக் கூட்டம் நடத்துதல்.
- பல சமயத்தைச் சார்ந்த திருமறை நூல்கள் வாசித்து, விளக்கம் கூறுதல்.

- தீபாவளி, ரம்சான், கிறிஸ்துமஸ் போன்ற சமய விழாக்களையும், சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற தேசிய விழாக்களையும் பள்ளியோடு இணைந்து கொண்டாடுதல்.
- பல்சமயப் பெரியவர்களை அழைத்து அறிவுரை பெறுதல்.
- சமய நல்லிணக்கத்தையும், நாட்டுப்பற்றையும், உலக சகோதரத்துவத்தையும், அன்பையும், அமைதியையும் வலி யுறுத்தும் பல்வேறு கலைப்போட்டிகளில் பங்கு பெறுதல்.
- ஆண்டுக்கொருமுறை மாவட்ட அளவில் எல்லா சிறார் பேரவையும் இணைந்து கருத்தரங்கம், கலைப்போட்டிகள் நடத்துதல்
- ஆண்டு இறுதியில் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து ஒருங்கிணைப்பாளருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

சிறார் அவை அமைப்பு முறை

- கன்னியாகுமரி மாவட்ட திருவருட்பேரவை, சிறார் அவை பற்றியும் (பல்சமய மாணாக்கர் அமைப்பு) அதன் நோக்கம் குறித்தும் பள்ளி பொது வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர்களுக்கு எடுத்துக்கூறி சிறார் பேரவையில் சேர அழைப்பு விடல் வேண்டும்.
- ஆர்வமாக வரும் அனைத்து சமய மாணவர்களையும் ஏற்றுக்கொண்டு சிறார் அவை அமைக்க வேண்டும்.
- சிறார் அவையில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் உறுப்பினராகச் சேரலாம்.
- சிறார் அவைக்கு ஒரு தலைவர், ஒரு துணைத்தலைவர் மற்றும் ஒரு செயலரை மாணவர்களே தேர்ந்தெடுக்க வேண்டும்.
- தொடக்க விழாவில் உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்து பேரவையில் சேர வேண்டும்.
- சிறார் அவை உறுப்பினர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.
- பள்ளித் தலைமை ஆசிரியரே பள்ளி அமைப்பின் தலைவராக இருப்பார்.
- ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்கள் வழிகாட்டிகளாகச் செயல்படுவர்.
- பள்ளியளவிலும், மாவட்ட அளவிலும் குழுக்கள்அமைத்து சிறார் அவை செயல்படும்.

கன்னியாகுமரி மாவட்ட திருவருட்பேரவையின் ஒரு சிறகாக இருந்து சிறார் அவை செயல்படும்.

கூட்டம் நடத்தும் முறை

- கூட்ட நிகழ்வானது கீழ்க்கண்ட முறைப்படி நடத்தப்பட்டால் சிறப்பாக அமையும்.

  மாதம் ஒரு முறை கூட்டம் நடத்தப்பட வேண்டும். (மதியம் கடைசி பாடவேளை நடத்தலாம்)..
- கூட்டம் நடக்கும் நாள், இடம், நேரம் பற்றிய தகவல்களை சிறார் அவைச் செயலர் மூலம் மாணவர்களுக்கு முன்னமே அறிவித்து விட வேண்டும்.
- ஒவ்வொரு கூட்டத்திற்கும் வெளியிருந்து ஒரு சிறப்பு விருந்தினரையோ அல்லது பள்ளியின் ஆசிரியர் ஒருவரையோ அழைத்து கருத்துரை வழங்கச் செய்யலாம்.

இறைவணக்கம் (பொதுவான பாடல்)

மும்மறை வாசகங்கள் (விளக்கங்களுடன்)

மன்றாட்டுக்கள்

வரவேற்புரை

அறிக்கை வாசித்தல்

மாணவர் கலந்துரையாடல்

மாணவர்களின் படைப்புத் திறனை வெளிப்படுத்தும் மாணவர் நேரம்

சிறப்பு விருந்தினர் கருத்துரை

சிறார் அவைப் பாடல்

நன்றியுரை

- ஒவ்வொரு கூட்ட முடிவிலும் அடுத்த கூட்டத்திற்கான கலந்துரையாடல் தலைப்பு வழங்கப்பட வேண்டும்.
- கூட்ட நிகழ்வுகளை அறிக்கை நோட்டில் எழுதி தலைமையாசிரியரிடம் ஒப்புதல் பெறவேண்டும். இதன் நகலை மாவட்ட ஒருங்கிணைப்பாளருக்கு அனுப்ப வேண்டும்.

இயக்கத்தில் உறுப்பினராகச் சேரும் மாணவர்கள் எடுக்க வேண்டிய உறுதிமொழி

செல்வன் / செல்வி ....

ஆகிய நான்
திருவருட்பேரவையின் சிறார்அவை
உறுப்பினராக விரும்புகிறேன்.
எனது உள்ளத்திலும், இந்த உலகிலும்
மனித நேயத்தையும்,
உலக சகோதர மனப்பான்மையையும்
வளர்ப்பேன்.
அனைத்து உயிர்களையும் நேசித்து
இயற்கையை பேணிக் காப்பேன்.
அன்பு உறவையும்,
சமய நல்லிணக்கதையும்,
உலக அமைதியையும்,
வளர்த்தெடுக்கப் பாடுபடுவேன்.
என் எண்ணத்தாலும், சொல்லாலும்,
செயலாலும்
பிறருக்கு
எடுத்துக்காட்டாக வாழ்வேன்
என உறுதி கூறுகிறேன்.

இயக்கப் பாடல்

ஒவ்வொரு மனிதரும் என் நண்பர்
ஒவ்வொரு மனிதரும் சகோதரர்
என் சகோதரர்

சரணம் - 1

வறுமையில் வாழ்பவர் என் நண்பர்
வருத்தத்தில் இருப்பவர் சகோதரர்
அல்லல் படுபவர் என் நண்பர்
ஆபத்தில் இருப்பவர் சகோதரர்
காரணம் அவரும் மனிதர் - 2

சரணம் - 2

பிறர் குலம் சேர்ந்தாலும் என் நண்பர்
பிறஇனம் வாழ்ந்தாலும் சகோதரர்
பிறமொழி பேசினாலும் என் நண்பர்
பிறமதம் சேர்ந்தாலும் சகோதரர்
காரணம் அவரும் மனிதர் - 2

சரணம் - 3

அழகை இழந்தவர் என் நண்பர்
அறிவை இழந்தவர் சகோதரர்
ஊனமாய் இருப்பவர் என் நண்பர்
ஊமையாய்ப் பிறந்தவர் சகோதரர்
காரணம் அவரும் மனிதர் -2

பராமரிக்க வேண்டிய பதிவேடுகள்

- மாணவர் சேர்க்கைப் படிவம்
- வருகைப் பதிவேடு
- கூட்ட அறிக்கை ஏடு
- தனித்திறன் பதிவேடு
- கோப்புகள்

"அன்பே வாழ்வாக ...!"

வழிபாடு 1

தொடக்கமாக

"புதிய தென்றல் சமுதாயத்தில் நுழைவதற்கான தருணம் இது" என்று சமூக சிந்தனையாளர் ஒருவர் அன்று கூறியதற்கு முத்தாய்ப்பாக அமைவது தான் இன்றைய பல்சமய கூட்டங்கள்.

பகிர்வே இறைவாழ்வு ...!
அன்பே இறைஉறவு ...!!

என்ற கருத்தை மையமாகக் கொண்டு தங்கள் வாழ்விலும் கடைப்பிடித்து ஒருவர் மற்றவரோடு ஆழ்ந்த உறவு கொண்டு ஒரே சமூகமாக அதுவும் அன்பு சமூகமாக வாழ நம்மை அழைக்கின்றது இந்த பல்சமய பொது வழிபாடு!

"எங்கெங்கு நல்லதுண்டோ அதையெல்லாம் பற்றிக் கொள்ளுங்கள்" என்ற ஆன்றோரின் வாக்கும் "அனைத்து சமயங்களும் இறைவனில் சங்கமமாகின்றன" என்ற மூத்தோரின் முதுமொழிகளும்.

"மறைகளில் மறைந்துள்ள மனித நேயமே இறைவனை நமக்கு சுட்டிக்காட்டுகின்றது" என்ற பண்பாளரின் வாக்கும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பழமொழியும் அன்பு சமூகமே இறைவன் வாழும் உறைவிடம் என்பதை நமக்கு சுட்டிக்காட்டும் கலங்கரை விளக்கங்கள் ஆகும்.

"அன்பே இறைவன்" என்ற குழு உணர்வு நம்மை இந்த வழிபாட்டிற்கு இட்டுச் செல்கிறது ..! இந்த மகிழ்ச்சி நிறைந்த குழு உணர்விற்கும், சமூக உணர்விற்கும் மூலக் காரணமாக உள்ளது எல்லா மறை உண்மைகளிலும் மறைந்திருக்கும் அன்பு, பாசம், கருணை, நேசம், மன்னிப்பு, ஏற்றுக் கொள்ளுதலுமாகும்.

இறையுறவில் சங்கமமாகி, மனித உறவை வளர்க்க நமக்கு சிறப்பான அழைப்பு விடப்படுகிறது! எனவே உலகில் பிறந்த அனைவரும் சாதி சமயம் கருதாது இறைவனின் குழந்தைகள் என்ற மகிழ்ச்சி உணர்வோடு இறைவனை போற்றிப் புகழ்வோம்.

பாடல் : ஆன்மா தேடும் .... (காண்க பின் இணைப்பு)
(இதுபோல் ஏதேனும் ஒரு பாடல் பாடலாம்)

சமய உறவை, வளர்த்துக் கொண்டால் அன்பின் மலர்கள் அங்கு மலரும். பாச வலையை வீசிவிட்டால் உறவின் மீன்கள் வலையில் விழும். பண்போடு வாழ்ந்திடவே அனைவரையும் அன்போடு அழைக்கின்றது இந்த பல்சமய வழிபாடு.

சமய உறவு உணர்வுகளை மதிக்கும், உண்மையை விளக்கும், அருள்வாக்கைக் கொடுக்கும், கவலையை நீக்கும், கண்ணீரைத் துடைக்கும், பிரிவினையை அகற்றும், சம உரிமை கொடுக்கும், பகைவரை மன்னிக்கும், சமாதானத்தை வளர்த்திடும் ... மனித நேயத்தைக் கட்டிக்காக்கும்...!

எனவே,

சிந்திப்போம்!

மணத்தை மலரிடமிருந்து பிரிக்க முடியுமா?

அலையை கடலிலிருந்து பிரிக்க முடியுமா?

துடிப்பினை இதயத்திடமிருந்து பிரிக்க முடியுமா?

அழகை இயற்கையிலிருந்து பிரிக்க முடியுமா?

இறை அடியார்களாகிய எங்களை மனித நேயத்திலிருந்துதான் பிரிக்க முடியுமா?

மனித நேயத்தையும் இறையன்பையும் சுட்டிக்காட்டும் திருவாசகங்களுக்குச் செவிமடுப்போம்...!

ஸ்ரீமத் பகவத் கீதை :

பகுதி : 12, வசனங்கள் : 13- 14 முடிய

எவன் எல்லா உயிரினங்களிடமும் விருப்பில்லாதவனோ, தன்னலமில்லாமல் எல்லாரிடமும் அன்பு கொண்டவனோ, காரணமின்றி இரக்கம் காட்டுபவனோ, மமகாரம் அற்றவனோ, அகங்காரம் அற்றவனோ, இன்ப துன்பங்கள் நேரும்போது நிலைமாறாது சமமாக இருப்பவனோ, பொறுமை இயல்புடையவனோ, அதாவது குற்றம் செய்தவனுக்கு அபயம் அளிப்பவனோ, யோகியோ, எப்பொழுதும் எல்லா விதங்களிலும் திருப்தி உள்ளவனோ, மனம், புலன்களோடு கூடிய உடலை தன்வசப்படுத்தியவனோ, மேலும் என்மீது திடமான நம்பிக்கை உடையவனோ, என்னிடத்தில் மனம், புத்தி இவற்றை அர்ப்பணம் செய்தவனோ, என்னுடைய அந்த பக்தன் எனக்குப் பிரியமானவன்.

இது தூய நூல் தரும் திருவாக்கு!

திருவிவிலியம் :

புனித பவுல் அடிகளார் கொரிந்து நகர மக்களுக்கு எழுதிய முதல் திருமடல்

பகுதி : 13, வசனங்கள் : 4 - 8 முடிய

அன்பு பொறுமை உள்ளது, நன்மை செய்யும், பொறாமைப் படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, இறுமாப்பு அடையாது, அன்பு இழிவானதைச் செய்யாது, தன்னலம் நாடாது, எரிச்சலுக்கு இடம் கொடாது, தீங்கு நினையாது. அன்பு தீவினையில் மகிழ்வுறாது,



மாறாக உண்மையில் அது மகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும், அனைத்தையும் நம்பும், அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும், அனைத்திலும் மனவுறுதியாய் இருக்கும். இறைவாக்கு உரைக்கும் கொடை ஒழிந்துபோகும், பரவசப் பேச்சு பேசும் கொடையும் ஒழிந்து போகும், அறிவும் அழிந்து போகும். ஆனால் அன்பு ஒருபோதும் அழியாது.

இது திருநூல் தரும் திருவாக்கு!

திருக்குர்ஆன் :

பகுதி : 2, வசனம் : 215

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்..

நீங்கள் எந்த ஒரு நல்ல பொருளையும் செலவு செய்யுங்கள். (அதனை உங்கள்) பெற்றோருக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், வறியவர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் செலவழியுங்கள். மேலும் நீங்கள் எந்த நன்மை செய்தாலும் அதனைத் திண்ணமாக அல்லாஹ் நன்கறிபவனாக இருக்கிறான்.

இது திருக்குர்ஆன் தரும் திருவாக்கு!

நிறைவுரை:

பிரியமானவர்களே!

தன்னலமில்லாமல் எல்லா உயிர்களிடமும் அன்பு கொண்டவன் இறைவனுக்கு பிரியமானவன் எனக் கீதை கூறுகிறது. அன்பு இழிவானதைச் செய்யாது, தன்னலம்

நாடுகிற மக்களிடம் இருந்தாலும், பிறருக்கு அன்புடன் சேவையாற்றுபவரை அல்லாஹ் நன்கு அறிகிறான் என திருக்குர்ஆன் கூறுகிறது.

இவ்வாறாக எல்லா மறைகளும் அன்பை உயர்வுபடுத்திக் கூறுகின்றன. எனவே தான் அன்பே கடவுள் என ஆன்றோர்கள் கூறுகின்றனர். எனவே நாமும் அன்பு வழியில் வாழ்வோம். அன்பையே வாழ்வாக்குவோம்!

அடையாள அர்ப்பணங்கள்

1. ஒளி:

ஒளியாம் இறைவா! எரிகின்ற அகல்போல் நாங்கள் எம்மையே கரைத்து சுயநலம் இல்லா பிறர் நலம் பேணும் தியாக மனப்பான்மையோடு பல்சமய உறவில் நாளும் வளம் பெற, உரம்பெற வரம் வேண்டி இவ்வொளியை உம்மிடம் அர்ப்பணிக்கின்றோம்.

2. சங்கிலி:

ஒரு வளையம், மற்ற வளையங்களுடன் உறுதியாய் பிணைக்கப்பட்டிருப்பது போல நாங்களும் பல்வேறு சமயங்களைப் பின்பற்றுபவராக இருந்தாலும், எல்லோரும் இறைவனின் பிள்ளைகள் என்பதை உணர்ந்து, நட்புறவில் இணைந்து எங்கள் உடனிருப்பு வெளிப்பட அருள்வேண்டி எங்களை இந்த சங்கிலிவழியாக உமக்கு படைக்கின்றோம்.

3. வெள்ளைத் தாள்:

எல்லைகளைக் கடந்த இறைவா! நாங்கள் பெற்றுக் கொண்டவை, எம்மிடம் உள்ளவை அனைத்தும் நீர் தந்த கொடைகள் என்பதை உணர்கிறோம். இந்த வெற்றுக் காகிதத்தைத் தாங்கி நிற்கும் எங்களை கண்ணோக்கும். தூய்மையாம் இவ்வெற்றுக் காகிதத்தைப் போல, எம் உள்ளங்கள் தூய்மையுடன் நல்லவற்றையே சிந்திக்கவும்,

நல்லவற்றையே செய்யும் ஒரு கருவியாகவும், மாறிட, உம் கரத்தில் இவ்வெள்ளைத்தாள் போன்ற எம் இதயத்தை ஒப்புக் கொடுக்கின்றோம்.

இதுபோல காணிக்கை பொருட்களுக்கு தக்கவாறு காணிக்கை மன்றாட்டு வாசிக்கலாம்.

வேண்டுகை:

அகில உலகத்தையும் அன்பில் இணைக்கும் பரம்பொருளே ...

பாவ உலகைப் பரவசமடையச் செய்யும் பகவானே!
மாசு நிறைந்த வாழ்வினைத் துடைக்க வந்த தூய இறைவா....
சங்கடம் நிறைந்த மனித வாழ்வில் சகல நன்மைகளையும் வழங்க வந்த ஆண்டவனே!
அழகிய உலகில் அன்பு நிலவ மன்றாடுகிறோம்...

நிறைவுரை:

ஒரு நபிகள் நாயகம் தோன்றினார்- பாசத்தையும் பகிர்வையும் சமுதாயத்திற்குச் சுட்டிக் காட்ட. ஓர் இராமர் தோன்றினார்- இரக்கத்தையும், மன்னிப்பையும் மானிடருக்கு அறிவிக்க. ஓர் இயேசு தோன்றினார்- மீட்பையும், அன்பையும் பாருக்குப் பறைசாற்ற. ஒரு புத்தர் தோன்றினார்- அனைத்தும் மாயை என்பதை அவனிக்கு அறிவித்திட . ஒரு காந்தி தோன்றினார்- அகிம்சையும், உண்மையுமே வாழ்வு என்பதை வாழ்ந்து காட்டிட . ஒரு விவேகானந்தர் தோன்றினார்- அனைவரும் சகோதர, சகோதரிகள் என்பதை நாடு கடந்தும் அறிவித்திட .

சிந்திப்போம்!
நீயும் ... நானும் ...
ஏன் தோன்றினோம் ...?

இவ்வழியில் நம் வாழ்வையும் பொருளுள்ளதாக மாற்றுவோம் என்ற சிந்தனையை இந்த வேண்டுகை வேளையிலிருந்து வாழ்வுக்கு எடுத்துச் செல்வோம்.

"மனிதநேயமே மனிதனின் நிறம்" 2

தொடக்க முன்னுரை:

அன்பு இளம் உள்ளங்களே! இன்றைய காலைப் பொழுதில் நாம் இறைவன் முன் சங்கமமாகி நின்றோம். இயற்கையில் உறைந்துள்ள இறைவனையும், ஒளியில் மறைந்துள்ள இறைத் தன்மையையும், மலரில் கலந்துள்ள இறைசக்தியையும், மக்களில் புதைந்துள்ள இறை ஆற்றலையும் ஒன்று திரட்டி இறைவனை போற்றிப் புகழ்வோம். நமது எண்ணங்களுக்கும், சக்திக்கும் மேலான இறைவனிடம் நம்மை அர்ப்பணிப்போம். அனைத்திற்கும் ஆதிகாரணமாகிய இறைவனிடம் வேண்டுவோம்.

நம்மை ஆசீர்வதிக்க மன்றாடுவோம்.

நமது வாழ்வின் பொருளும்
நமது உயிரின் கருவும்
நமது எண்ணங்களின் ஊற்றும்
நமது அசைவிற்கு ஆதாரமுமான
இறைவனின் அருட்சக்தி நம்மில் அசைவாடி
நம்மை இறைச்சாயலில் உருவாக்கவும், இவ்வாறு ஒன்றுமில்லாமையிலிருந்து உருவான நாம் உருவிலா இறைவனிடமே இறுதியில் சங்கமமாக வேண்டும் என்ற உள்ளுணர்வைப் பெறவும், நம் கண்களை மூடி, அவர் பாதம் தொட்டு பாடுவோம்.

பஜன்: ஐயனே மெய்யனே சரணம் ...
அம்மையே அப்பனே சரணம்...
அண்ணலே உண்மையே சரணம் ...

மனிதர் மனிதராக வாழ மார்க்கங்கள் தேவை. மார்க்கங்கள் தான் ஒருவரை நேரிய பாதைக்கும், இறைஉண்மைக்கும் இட்டுச் செல்கின்றன.

எங்கே நிம்மதி?

எங்கே நிம்மதி ... ? என அலையும் ஒவ்வொரு மனிதருக்கும் அவரவர் மார்க்கமே அவருக்கு வழிகாட்டி, தவறும்போது தூக்கி நிறுத்தியும், தடுமாறும்போது தட்டிக் கொடுத்தும், தலைக்கனத்தோடு நிற்கும்போது தண்டித்து திருத்தியும், ஆழ்ந்த அமைதியில் மனிதனை, புனிதனாக்க வழிகாட்டுகின்றன சமயங்களின் சாரங்கள்!

இந்து சமயம் காட்டும் (சச்சிதானந்தா) முக்தி

கிறிஸ்தவம் காட்டும் இறையரசு...

இஸ்லாம் கூறும் சகோதரத்துவம், அமைதி ...

பக்தி நெறி காட்டும் ஞானஉலகு

காந்தி கூறும் சர்வோதயா...

கார்ல் மார்க்ஸ் சொல்லும் புதிய சமுதாயம்

ஒரே வார்த்தையில் கூறவேண்டுமாயின் அனைத்து சமயங்களும், சமூக மாற்ற சிந்தனையாளர்களும் கூறுவது “மனித நேயம் மிக்க புதிய சமுதாயம்”.. என்பதே.

இன்று நாமும் வாழ, பிறரையும் வாழ்விக்க நம்மை சிறப்பான முறையில் அழைக்கிறது, வாழ்வுக்கு வழியைச் சுட்டிக்காட்டும் திருநூல்களில் வெளிப்படும் இறைமுத்துகள். அதனை ஏற்று இறைபிரசன்னத்திற்கு நம் அஞ்சலியைச் செலுத்துவோம்.

(அஞ்சலி செலுத்துதல்)

அன்றாட பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கும் மானிட சமுதாயம் தன்னுள்ளும், பிறரிடமும் மறைந்திருக்கும் இறைவனை காண மறந்து வாழ்கிறது. நாம் மனிதருக்குச் செய்யும்போதெல்லாம் அதை இறைவனுக்கே செய்கிறோம் என்ற நற்சிந்தனையை மனதில் எற்று, அதன்படி அமையும் இந்த திருவாசகங்களுக்காக செவிகளை, மட்டுமல்ல மனதையும் திறப்போம்.

அன்புறவில் வாழ வரம் அருள வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

- மெல்லிய தென்றலிலும், உள்ளத்தின் ஆழ்ந்த அமைதியிலும், நம்மோடு உறவாடும் இறைவனிடம் அமைதியாக வேண்டுதல் செய்வோம்.

வேண்டுகை :

அன்பின் தெய்வமே, என்னை படைத்தாய்
நான் உயிர் பெற்றேன்
என்னை வளர்த்தாய், நான் வளர்ந்தேன்
என்னை உருவாக்கினாய், நான் உருவானேன்
என்னை தேற்றினாய், நான் தேறினேன்.
என்னை நலப்படுத்தினாய், நான் நலமானேன்
என்னையே நினைத்தாய் நீ
ஆனால் நானோ உன்னை
நினைக்கவில்லை ஏனோ?

அன்புள்ள அம்மையே அப்பா, உமது பிள்ளைகளாகிய நாங்கள் மகிழ்ச்சியாக இருக்க அருள் தாரும். எங்கள் பாவங்களை மன்னியும்... பாவத்தின் சம்பளம் மரணம் என தெரிந்தும் பாவம் செய்கிறோம். எங்களை நல்வழிப்படுத்தும் தெய்வமே, எங்கள் நாடு, வீடு, மாநிலம், உலகம் அனைத்தும் உம் சித்தம் போல் இருக்க அருள் புரியும். உம் வழியில் சாகும் வரை வாழ இறைவா அருள் புரியும்.

நன்றி இறைவா ! நன்றி !!

நம்பிக்கை ஒளி

முன்னுரை :

உலகில் எல்லாருக்கும் ஒரே விதமான பொறுப்புக்கள், பணிகள், கடமைகள் அமைவதில்லை.

நாடு, சமுதாயம், தத்தம் சூழ்நிலை, நிலைமை இவற்றிற்கேற்றவாறு பணிகள் மாறுபடும். உயர்ந்த மனிதர்கள் தமது நடத்தையினாலேயே உலகிற்குப் பாடம் புகட்டி, மக்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்துகிறார்கள் மற்றும் வழிகாட்டுகிறார்கள். இவ்வாறு நாமும் செய்வதன் மூலம் உலகிற்குப் பாடம் கற்பித்து, அவரவர்களை அவரவர் பொறுப்பில் ஈடுபடுத்த வேண்டும்.

அப்பொழுது அவற்றை மக்கள் ஏற்று பின்பற்றுவார்கள். உலக மக்களின் நலனுக்கான நமது சொல் மட்டுமல்ல செயலும் அமைய வேண்டும். அப்பொழுது நாம் ஏற்றும் நம்பிக்கை ஒளியின் வழியில் உலகம் உயரும்.

ஸ்ரீமத் பகவத் கீதை : (கர்ம யோகம்)

அத்தியாயம் : 3, வசனங்கள் : 20-21 முடிய

ஜனகர் முதலிய ஞானிகளும் பற்றின்றிக் கர்மங்களைச் செய்ததன் மூலம் சிறந்த பேற்றை அடைந்தனர். அவ்விதமே உலகத்திற்கு வழிகாட்டுவது என்பதை நன்கு மனதில் கொண்டு நீயும் கர்மங்களைச் செய்வதுதான் உனக்கு உரிய செயலாகும்.

உயர்ந்த மனிதன் எதை எதைச் செய்கிறானோ ஏனையோரும் அதை அதையே செய்வர். அவன் எதைச் சான்றாக எடுத்துக்காட்டுகிறானோ மனித சமுதாயம் அனைத்தும் அதையே பின்பற்றி நடக்கிறது.

இது தூய நூல் தரும் திருவாக்கு!

திருவிவிலியம் :

திருத்தூதர் பவுல் எபிரேய மக்களுக்கு எழுதிய திருமுகம்

பகுதி : 3. வசனங்கள் : 12 - 14 முடிய.

"அன்பானவர்களே, நம்பிக்கை கொள்ளாத தீய உள்ளம், வாழும் கடவுளை விட்டு விலகும். இத்தகைய தீய உள்ளம் உங்களுள் எவருக்கும் இராதபடி பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுள் எவரும் பாவத்தால் ஏமாற்றப்பட்டு, கடின உள்ளத்தினர் ஆகாதவாறு, ஒவ்வொரு நாளும் "இன்றே" என எண்ணி, நாள்தோறும் ஒருவருக்கொருவர் அறிவுரை கூறுங்கள். தொடக்கத்தில் நாம் கொண்டிருந்த திடநம்பிக் கையை இறுதிவரை உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தால் நாமும் கிறிஸ்துவின் பங்காளிகளாவோம்".

இது திருநூல் தரும் திருவாக்கு!

திருக்குர்ஆன் :

(அல்பக்கரா) பகுதி : 2, வசனங்கள் : 159 - 160 முடிய

அளவிலாக் கருணையும், இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருபெயரால் ..

நாம் இறக்கியருளிய தெளிவான அறிவுரைகளையும், வழிகாட்டுதலையும் அவற்றை மக்கள் அனைவருக்காகவும் நம் வேதத்தில் எடுத்துரைத்த பின்னரும் எவர்கள் அவற்றை மறைக்கின்றார்களோ, அவர்களை நிச்சயமாக அல்லாஹ் சபிக்கின்றான். மேலும் சபிப்போர் அனைவரும் அவர்களைச் சபிக்கின்றார்கள். ஆனால், யார் (இத்தவறிலிருந்து) திருந்தி தம் செயல்முறையை ஒழுங்குபடுத்திக் கொண்டு (தாம் மறைத்திருந்தவற்றை) எடுத்துரைக்கிறார்களோ அவர்களை நான் மன்னிப்பேன். நான் பெரிதும் மன்னிப்பவனாகவும், கருணை புரிபவனாகவும் இருக்கின்றேன்.

இது திருக்குர்ஆன் தரும் திருவாக்கு!

வேண்டுகை :

அன்பான இறைவா இவ்வுலகில் சண்டைகள் நீங்கி சமாதானம் நிலவவும், ஒவ்வொரு நாட்டினரும் போட்டி, பொறாமை இல்லாது அன்புடன் வாழவும், ஒவ்வொரு நாட்டிலும் சமயப்பிரச்சினை மற்றும் இனப் பிரச்சினை இல்லாது அமைதி நிலவவும், ஒவ்வொரு சமுதாயத்திலும் சாதிப் பிரச்சினைகள் நீங்கி மகிழ்ச்சி உண்டாகவும், ஒவ்வொரு நகரங்கள் மற்றும் கிராமங்களில் வாழும் அலுவலர்கள் தத்தமது வேலைகளை கவனிக்க வேண்டிய மனத்திறனையும், விவசாயிகள் விவசாயத்தை கவனிக்க வேண்டிய உடல்திறனையும், மாணவர்கள், ஆசிரியர் போதிக்கும் பாடங்களை புரிந்துகொள்ளவும் நம்பிக்கையுடன் வாழ உம் அருளை தருமாறு வேண்டுகிறேன்.

நன்மக்கள் பண்பு

முன்னுரை:

எங்கும் இறைவன் நிறைந்திருக்கிறார். நாம் அனைவருமே அவரால் படைக்கப்பட்ட மக்கள். எனவே, மனிதர்களிடம் வேற்றுமை பாராட்டாமல் அனைவரும் சகோதரர்கள் என்ற உறவை நிலைப்படுத்தும் வண்ணம் அனைவரிடமும் விருப்பு - வெறுப்பு இல்லாமல் சம மனநிலை கொண்டிருக்க வேண்டும். யாருக்கும் தீமை செய்யாது, நன்மையினால் தீமையை வெல்ல வேண்டும். அன்பு, பிணக்குகளை நீக்கி இணக்கத்தை ஏற்படுத்தும், தன்னலம் கருதாமல் அனைவருக்கும் நன்மை விரும்புதலே கடவுளுக்கு விருப்பமான செயல் என்பதை நாம் நமது வாழ்வில் வெளிப்படுத்துவோம்.

ஸ்ரீமத் பகவத் கீதை: (ஆத்மஸம்யம யோகம்)

அத்தியாயம் : 6. வசனங்கள் : 8-9 முடிய

எவரது உள்ளம் ஞானத்தாலும், விஞ்ஞானத்தாலும் நிறைந்து திருப்தியாக இருக்கிறதோ, எவர் தம் நிலையிலிருந்து எந்தச் சூழ்நிலையிலும் விகாரமின்றி இருக்கிறாரோ, எவர் தம் புலன்களை நன்கு அடக்கி வசப்படுத்தியுள்ளாரோ, மேலும் எவர் மண், கல், பொன் ஆகியவற்றில் சமபாவனை கொண்டு உள்ளாரோ, அந்த யோகி பகவானை அடைந்தவர் என்று அழைக்கப்படுகிறார். தன்னலம் கருதாது அனைவருக்கும் ஹிதம் செய்பவன், நண்பன். பகைவன், உதாசீனன், (ஒரு சார்புமற்றவன்) நடுநிலையிலே நிற்பவன் (இரு பிரிவினருக்கும் நன்மையை நாடுபவன்) வெறுக்கத் தக்கவன், உறவினர் ஆகியவர்களிடத்தும் நல்லோர்களிடத்தும் பாவிகளிடத்தும் கூட சமமான பாவனை கொண்டுள்ளவன் மிகவும் சிறந்தவன் ஆகிறான்.

இது தூய நூல் தரும் திருவாக்கு!

திருவிவிலியம் :

புனித பவுல் அடிகளார் கொலோசிய நகர மக்களுக்கு எழுதிய திருமடல்

பகுதி : 3 வசனங்கள் : 12 - 14 முடிய

நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள், அவரது அன்பிற்குரிய இறைமக்கள். எனவே, அதற்கிசைய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள். ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள். ஒருவரைப் பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்தது போல நீங்களும் மன்னிக்க வேண்டும். இவையனைத்துக்கும் மேலாக அன்பையே கொண்டிருங்கள். அதுவே இவையனைத்தையும் பிணைத்து நிறைவு பெறச் செய்யும்.

இது திருநூல் தரும் திருவாக்கு!

திருக்குர்ஆன்:

பகுதி [ஆலஇம்ரான்] வசனங்கள் : 110 -112 முடிய

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்.....

இனி மனித இனத்தைச் சீர்படுத்துவதற்காக தோற்றுவிக்கப் பட்டிருக்கும் மிகச் சிறந்த சமூகத்தவராய் நீங்கள் இருக்கிறீர் கள். நீங்கள் நன்மை புரியும்படி ஏவுகின்றீர்கள். தீமையிலிருந்து தடுக்கிறீர்கள். மேலும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள் கின்றீர்கள். வேதம் அருளப்பட்ட இவர்களும் நம்பிக்கை கொண்டிருந்தால் அது அவர்களுக்குத்தான் நன்மையாக இருந்திருக்கும். ஆனால் வேதம் அருளப்பட்டோர் அனைவரும் ஒரே மாதிரியானவர்களாய் இல்லை. நல்லவை புரியுமாறு ஏவி, தீயவற்றிலிருந்து தடுக்கின்றனர். மேலும், நற்பணிகளில் முனைப்புடன் ஈடுபடுகின்றனர். இவர்கள்தாம் நன்மக்களில் உள்ளவர்களாவர்.

இது திருக்குர்ஆன் தரும் திருவாக்கு!

வேண்டுகை:

- பிறையை சின்னமாக கொண்ட இஸ்லாம்
- சூரிய வணக்கம் செய்யும் இந்து
- கிறிஸ்துவை வழியாகவும் ஒளியாகவும் கொண்டாடும் கிறித்தவம்
- எல்லாம் இயற்கையை மையப்படுத்தியே இருக்கின்றன..

இறைவா!

நாங்களும் நீர் படைத்த இயற்கையையும்,

இயற்கையில் வாழும் மனிதர்களின் உயிரோட்டமான

உடனிருப்பை அறிந்து கொண்டு

அவற்றோடு சேர்ந்து வாழ கற்றுத் தாரும்.

ஒற்றுமையில் எங்களின் ஒருமைப்பாடு அமைய வேண்டுகிறோம் –

இங்கே



ஓசன்னா என்று பாடினாலும்

ஓம் பகவான் என்று சொன்னாலும்

அல்லாகு அக்பரென ஓதினாலும்

வேறுபாடுகளை நாங்கள் மறந்தவர்களாய்

மனித நேயத்தின் மையத்தில் பிடிப்பு கொண்டு வாழ

உம்மை வேண்டுகிறோம்.

அத்தியாயம் 5

உண்மையான பக்தி

முன்னுரை:

எங்கும் சமமாக ஒளிரும் சூரியனுடைய பிரதி பிம்பம் கண்ணாடி முதலிய சுத்தமான பொருட்களில் தெளிவாகத் தெரிகிறது. கட்டைகளில் அது போல தெரிவதில்லை. அதனால் சூரியனுக்குப் பாரபட்சம் இருக்கிறது என்பதில்லை. அது போல கடவுளும் எல்லா மனிதர்களிடமும் பாரபட்சம் இன்றி உள்ளார் என்றுணர்வோம். தூய்மையான உள்ளத்தில் தான் இறைவன் தெரிகின்றார். கடவுளின் விருப்பமின்றி எச்செயலும் இவ்வுலகில் நிகழாது. இறைவனோடு இரண்டறக் கலந்து அவரை முன் நிறுத்தி, நாம் மகிழ்ச்சியான வாழ்வு வாழ, பிறரையும் வாழவைக்க இறைப் பற்றுடன் நாம் வாழ்வோம்.

ஸ்ரீமத் பகவத் கீதை:

அத்தியாயம் : 9, வசனங்கள் : 29 -31 முடிய

எல்லா உயிரினங்களிலும் நான் ஒரே சமமாக நிறைந்துள்ளேன். எனக்கு வெறுக்கத் தக்கவன் - வேண்டாதவன் இல்லை. வேண்டியவன் இல்லை. ஆனால் எவர்கள் அன்பு கொண்டு பக்தியுடன் என்னை வழிபடுகிறார்களோ, அவர்கள் என்னிடமும், நான் அவர்களிடமும் காணக் கூடியவனாக இருக்கிறேன். மிகவும் தீய நடத்தையுள்ளவனானாலும், வேறு எதிலும் நாட்டமின்றி என் பக்தனாகி என்னை வழிபடுவோனேயானால் அவன் நல்லவன் (சாது) என்றே கருதப்படத் தக்கவன். ஏனெனில் அவன் பகவானை பூஜிப்பதைக் காட்டிலும் சிறந்தது வேறு இல்லை என்ற நல்ல தீர்மானத்திற்கு வந்தவன். அவன் விரைவிலேயே பரமாத்மாவாக ஆகிறான். நிலையான அமைதியை அடைகிறான். என்னுடைய பக்தன் அழிவதில்லை என்ற சத்தியத்தை உறுதியாக அறிந்து கொள்.

இது தூய நூல் தரும் திருவாக்கு!

திருவிவிலியம்:

புனித யோவான் எழுதிய நற்செய்தி பகுதி : 15, வசனங்கள் : 5-7 முடிய

நானே திராட்சைச் செடி. நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுள்ளும் நான் அவருள்ளும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது. என்னோடு இணைந்து இராதவர் கொடியைப் போலத் தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார். அக்கொடிகள் கூட்டிச் சேர்க்கப்பட்டு நெருப்பிலிட்டு எரிக்கப்படும். நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுக்குள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்.

இது திருநூல் தரும் திருவாக்கு!

திருக்குர்ஆன்:

பகுதி [ஆல் ஹஷ்ர்] வசனங்கள் : 22 - 24 முடிய

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்...



அவன் தான் அல்லாஹ், அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவரும் இல்லை. அவன்தான் அரசன், மிகவும் தூய்மையானவன். முழுக்க முழுக்க சாந்தியுடையவன். அமைதி அளிப்பவன். பாதுகாப்பானவன். அனைவரையும் மிகைத்தவன். தனது கட்டளையை வலிமையுடன் செயல்படுத்தக்கூடியவன், பெருமைக்குரியவன்.

தூய்மையானவன் அல்லாஹ். மக்கள் புரியும் இணை வைப்புச் செயல்களை விட்டு. அந்த அல்லாஹ்தான் படைப்புக்கான திட்டம் வகுப்பவனும், அதனைச் செயல்படுத்துபவனும் அதற்கேற்ப வடிவம் அமைப்பவனுமாவான்.

இது திருக்குர்ஆன் தரும் திருவாக்கு!

வேண்டுகை :

முழுமையினின்று முழுமை வழிந்தோடும் முழு முதலே!

அகில உலகத்தையும் அமைதிப் படுத்தும் பரம்பொருளே...

பாவ உலகை பரவசமடையச் செய்யும் பகவானே!

மாசு நிறைந்த மனித வாழ்வினைத் தூசு துடைக்க வந்த தூய ஆவியே!

சங்கடம் நிறைந்த மனித வாழ்வில் சகல நன்மைகளையும்

வழங்க வந்த வானக வள்ளலே!

அலைக்கழிக்கும் மக்கள் வாழ்வினை

ஆக்கமுடைய வாழ்க்கையாக மாற்றவந்த வல்லவனே

சிக்கல் நிறைந்த இவ்வுலகினை

சிறப்பாய் மாற்றவந்த சிற்பியே!

அழகிய உலகில் அமைதி நிலவ அன்புக்கடவுள்

காட்சியளித்த பொன்னாட்டில் பக்தி வாழ்க!

என்றும் பக்தியுடன் உம்மை வேண்டுதல் புரிய அருள் வரம் நல்க உம்மை வேண்டுகிறோம்..

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உண்மையான பக்தன்

6

முன்னுரை:

மனிதருக்கு ஏற்படும் உலகியல் மகிழ்ச்சி கணநேரம்தான் இருக்கும். அவனது விருப்பம் நிறைவேறினால் மகிழ்ச்சி ஏற்படும். அது குறைந்துவிட்டால் மறுபடியும் மனக்குறை-மகிழ்ச்சியின்மைதான். ஆகவே அவன் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. கடவுளிடம் பக்தி சாதனை புரிகிறவர்களிடம் ஆரம்பத்திலேயே நட்பும், கருணையும் சிறப்பாக இருக்கும். அவருக்கு இயல்பிலும், நடைமுறையிலும் நட்பும், தயையும் இயல்பாகவே இருக்கும். தனக்குத் தீங்கிழைப்பவருக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமென்று விரும்பாமல் அவருக்கு அபயம் நிச்சயமாக அளிப்பவன். ஆகவே பக்தருக்குப் பிறரால் பாதிப்பு ஏற்படுவதில்லை. பக்தருக்கு எல்லாரும் தெய்வம்போல்!

ஸ்ரீமத் பகவத் கீதை : (பக்தி யோகம்)

அத்தியாயம் : 12. வசனங்கள் : 13 -14 முடிய

எவன் எல்லா உயிரினங்களிடமும் வெறுப்பு இல்லாதவனோ, தன்னலம் இல்லாமல் எல்லோரிடமும் அன்பு கொண்டவனோ, காரணமின்றி இரக்கம் காட்டுபவனோ, மமகாரமற்றவனோ, அகங்காரமற்றவனோ இன்ப துன்பங்கள் நேரும்போது நிலை மாறாது சமமாக இருப்பவனோ, பொறுக்கும் இயல்புடையவனோ அதாவது குற்றம் செய்தவனுக்கும் அபயம் அளிப்பவனோ, யோகியோ, எப்பொழுதும் எல்லா விதங்களிலும் திருப்தி உள்ளவனோ, மனம், புலன்களோடு கூடிய உடலைத் தன் வசப்படுத்தியவனோ, மேலும், என் மீது திடமான நம்பிக்கையுடையவனோ, என்னிடத்தில் மனம், புத்தி இவற்றை அர்ப்பணம் செய்தவனோ அந்த பக்தன் எனக்குப் பிரியமானவன்.

திருவிவிலியம் :

புனித மத்தேயு எழுதிய நற்செய்தி பகுதி : 12, வசனங்கள் : 18-21 முடிய

இதோ என் ஊழியர். இவர் நான் தேர்ந்து கொண்டவர். இவரே என் அன்பர். இவரால் என் நெஞ்சம் பூரிப்படைகிறது. இவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன். அவர் மக்களினங்களுக்கு நீதியை அறிவிப்பார். இவர் சண்டை சச்சரவு செய்ய மாட்டார். கூக்குரலிடமாட்டார். தம் குரலைத் தெருவில் எழுப்பவுமாட்டார். நீதியை வெற்றி பெறச் செய்யும் வரை, நெரிந்த நாணலை முறியார். புகையும் திரியை அணையார். எல்லா மக்களினங்களும் இவர் பெயரில் நம்பிக்கை கொள்வர்.

இது திருநூல் தரும் திருவாக்கு!

திருக்குர்ஆன் :

பகுதி [ஆர்ஹஷ்ர்] வசனங்கள் : 5 - 10 முடிய

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால் ...

நன்மக்கள் இந்த உலகத்தில் நேர்ச்சைகளை நிறைவேற்றிக் கொண்டும் அனைத்துத் திசைகளிலும் துன்பங்கள் பரவக்கூடிய அந்த (மறுமை) நாளினைக் குறித்து அருகில் கொண்டுமிருப்பார்கள். மேலும் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பினால் வறியவருக்கும், அனாதைக்கும், கைதிக்கும் உணவளிக்கின்றார்கள். (மேலும், அவர்களிடம் கூறுகின்றார்கள்) நாங்கள் அல்லாஹ்வுக்காகவே உங்களுக்கு உணவளிக் கின்றோம். நாங்கள் உங்களிடமிருந்து எந்தப் பிரதிபலனையும், நன்றியையும் எதிர்பார்க்கவில்லை.

இது திருக்குர்ஆன் தரும் திருவாக்கு!

வேண்டுகை :

பசியாய் இருந்தேன்
உணவு கொடுத்தீர்கள்
என்று சொன்ன இறைவா !
ஆலயத்தில் உட்கொள்ளும் நற்கருணை!
கோவில் கொடுக்கப்படும் பிரசாதம் !
மசூதியில் மகிழ்ந்துண்ணும் கஞ்சி!
எல்லாம் பகிர்வின் வெளிப்பாடுகள்
என்பதை நாங்கள் உணர்ந்தவர்களாய்
எங்களிடம் இருப்பதை
பிறரோடு பகிர்ந்து கொள்பவர்களாய்
எம்மை மாற்ற
உம்மை வேண்டுகிறோம்.
எல்லாருக்கும் பொதுவாய் இருக்கும் இறைவா!
கழுத்தில் அணியும் சிலுவை
நெற்றியில் போடும் திருநீறு
தலையில் அணியும் குல்லா
எல்லாம் பொருளுள்ளதாய் அமையட்டும்
எங்கள் சிலுவை
பிறரை மீட்கவும்
எங்கள் திருநீறு மற்றவர்களும் சமம்
என்பதைச் சொல்லவும்
எங்கள் குல்லா மற்றவர்களுக்கு
வெயிலில் நிழல் கொடுக்கும்
மரங்களாக நாங்கள் மாறி வாழ வழிவகுக்கவும்
உம்மை வேண்டுகிறோம்.

பஜனைகள்

பஜனை – 1

✧ புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இறைவனை
புகழ்ந்திடு காலையிலே .... }– 2

✧ புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இறைவனை
புகழ்ந்திடு மாலையிலே }– 2

✧ புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இறைவனை
புகழ்ந்திடு இரவினிலே ... }– 2

✧ புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இறைவனை
புகழ்ந்திடு பொழுதெல்லாம் ... }– 2

✧ புகழ்ந்திடு மனமே புகழ்ந்திடு இறைவனை
புகழ்ந்திடு எப்பொழுதும்... }– 2

பஜனை – 2

2 ஆன்மா தேடும் ஆனந்தா போற்றி !
அகிலம் புகழும் ஆண்டவா போற்றி !
பாவத்தை நீக்கும் பகலவா போற்றி !
பரிவுடன் காக்கும் பரமா போற்றி !

பஜனை – 3

✧ தந்தையே இறைவா வணங்குகின்றோம்
வாழ்வை உமக்கு அளிக்கின்றோம்
உம்மை அன்பு செய்கின்றோம் ...!

✧ அம்மையே அப்பனே வணங்குகின்றோம்
வாழ்வை உமக்கு அளிக்கின்றோம்
உம்மை அன்பு செய்கின்றோம் ..!

✧ அம்மையே இறைவா வணங்குகின்றோம்
வாழ்வை உமக்கு அளிக்கின்றோம்
உம்மை அன்பு செய்கின்றோம் ..!

✧ ஜோதியே இறைவா வணங்குகின்றோம்
வாழ்வை உமக்கு அளிக்கின்றோம்
உம்மை அன்பு செய்கின்றோம் ...!

✧ வாழ்வின் ஊற்றே வணங்குகின்றோம்
வாழ்வை உமக்கு அளிக்கின்றோம்
உம்மை அன்பு செய்கின்றோம் ...!

✧ மனிதத்தின் முதல்வா வணங்குகின்றோம்
வாழ்வை உமக்கு அளிக்கின்றோம்
உம்மை அன்பு செய்கின்றோம் ...!

பஜனை - 4

✧ என் உயிரே இறைவா உம் திருவடி சரணம்
உம் பாதம் அமர்ந்து உம் மொழி கேட்க
என்ன தவம் செய்தேன் - நான்
என்ன தவம் செய்தேன்

✧ என் உயிரே இறைவா உம் திருவடி சரணம்
உம் பாதம் அமர்ந்து உம் வதனம் காண
என்ன தவம் செய்தேன் - நான்
என்ன தவம் செய்தேன்

✧ என் உயிரே இறைவா உம் திருவடி சரணம்
உம் பாதம் அமர்ந்து உம்முடன் பேச
என்ன தவம் செய்தேன் - நான்
என்ன தவம் செய்தேன்.

✧ என் உயிரே இறைவா உம் திருவடி சரணம்
உம் பாதம் அமர்ந்து உம்முடன் வாழ
என்ன தவம் செய்தேன் - நான்
என்ன தவம் செய்தேன்.

✧ என் உயிரே இறைவா உம் திருவடி சரணம்
உம் பாதம் அமர்ந்து உம் அன்பை சுவைக்க
என்ன தவம் செய்தேன் - நான்
என்ன தவம் செய்தேன்.

பஜனை - 5

அழைத்துச் செல்வாயே அன்பின் அரசே

1. பிழைகள் பொறுத்தெமைப் பெருவாழ்வினுக்கே
- **அழைத்துச் செல்வாயே**
2. பொய்மையில் நின்றெம்மை மெய்மை நோக்கி
- **அழைத்துச் செல்வாயே**
3. துன்பத்தில் நின்றெம்மை இன்பத்தை நோக்கி
- **அழைத்துச் செல்வாயே**
4. காரிருள் நின்றெம்மை பேரொளி நோக்கி
- **அழைத்துச் செல்வாயே**
5. அழிவினில் நின்றெம்மை அழியாமை நோக்கி
- **அழைத்துச் செல்வாயே**
6. சாவினில் நின்றெம்மை வாழ்வினை நோக்கி
- **அழைத்துச் செல்வாயே**

முச்சமயச் சிந்தனைகள்

- ❖ பிறரை வெறுக்காமல் யாவரிடமும் அன்பு செலுத்துவோர் கடவுளுக்கு மிக நெருங்கியவர் ஆகிறார்.

- பகவான் ஸ்ரீகிருஷ்ணர்

- ❖ யார் எந்த உயிரையும் தன் உயிர் போல பார்க்கிறானோ அவன் உள்ளத்தில்தான் இறைவன் இருக்கிறார்.

- வள்ளலார்

- ❖ ஒரு நூல் நிலையம் திறக்கப்படும் போது சிறைச்சாலையின் கதவு ஒன்று மூடப்படுகிறது.

- சுவாமி விவேகானந்தர்

- ❖ எந்த காரியத்தை செய்யும்போதும் அதில் வெறும் உடலுழைப்பு மட்டும் இருத்தல் கூடாது, மனமும் அதில் ஈடுபட வேண்டும்.

- சுவாமி சின்மயானந்தா

- ❖ கனிவான மறுமொழி கடுஞ்சினத்தையும் ஆற்றிவிடும்.

- நீதிமொழிகள் 15 : 1 (திருவிவிலியம்)

- ❖ பிறர் உங்களுக்கு செய்ய வேண்டுமென விரும்புகிறவற்றை எல்லாம் நீங்கள் அவர்களுக்கு செய்யுங்கள்.

- மத்தேயு 7 : 12 (திருவிவிலியம்)

- ❖ பொல்லாங்கு செய்து எவரும் நிலைத்ததில்லை. நேர்மையாளரின் வேரை அசைக்க முடியாது.

- நீதிமொழிகள் 12 : 3 (திருவிவிலியம்)

❖ மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கி கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பார் எனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?

- **இயேசு கிறிஸ்து (மத்தேயு 16 : 26)**

❖ தாயின் காலடியில் சொர்க்கம் இருக்கிறது.

- **நபிகள் நாயகம்**

❖ உப்பை நீர் கரைப்பது போன்று நற்குணம் பாவங்களைக் கரைத்துவிடும்.

- **நபிகள் நாயகம்**

❖ மண்ணில் உள்ள மனிதர்களை நீங்கள் நேசித்தால் விண்ணில் உள்ள இறைவன் உங்களை நேசிப்பார்.

- **நபிகள் நாயகம்**

❖ உண்மையில் இறைவன் மனிதர்களுக்கு அநீதி இழைப்பதில்லை. எனினும் மனிதர்கள் தமக்குத் தாமே அநீதி இழைத்துக் கொள்கின்றார்கள்.

- **திருக்குர்ஆன் - 10 : 44**

சான்றோர் வாக்குகள்

ஆயுளின் பெருமை ஆண்டுகளில் இல்லை!

வாழும் முறையில் தான் உள்ளது!

- திருவள்ளுவர்

- உடல் மெலியலாம் - ஆனால்

  உள்ளம் மெலியலாகாது. **- டாக்டர் மு.வ**

- எல்லாருக்கும் உதவி செய்ய முடியாவிட்டாலும்

  ஒருசில ஏழைகளுக்காவது உதவிசெய்ய வேண்டும்.

  - அன்னை தெரசா

- நற்பண்பு இல்லாத அறிவு ஆபத்தானது!

  அறிவில்லாத நற்பண்பு பயனற்றது!

  - பண்டித ஜவஹர்லால் நேரு

- அதிர்ஷ்டம் என்ற சொல்லை அடிக்கடி

  உச்சரிப்பவன் சோம்பேறி.

  கற்பி, ஒன்றுபடு, போராடு

  - டாக்டர் அம்பேத்கார்

- பிறருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பது நாணயம்;

  பிறருக்கு வாக்கே கொடுக்காமல் இருப்பது அறிவுடைமை.

  - கல்கி

❖ "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக" (யோவான். 17:21)

- இயேசு கிறிஸ்து

❖ உனக்கு நீயே நீதிபதியாக இரு
உண்மையில் நீ மகிழ்ச்சியாய் இருப்பாய்.

- மகாத்மா காந்தி

❖ சிறந்த புத்தகங்களை நாம் படிக்கும்போது
நம் மனம் சிறந்த எண்ணங்களில் ஊறி விடுகிறது.

- டாக்டர். எஸ். ராதாகிருஷ்ணன்

❖ அன்பிலே நண்பனை வெற்றி கொள் ..!
களத்திலே எதிரியை வெற்றி கொள் .. !
பண்பிலே அவையை வெற்றி கொள் ...!

- கவிஞர் கண்ணதாசன்

❖ ஒரு பெண்ணிற்கு கல்வி புகட்டுவது
ஒரு குடும்பத்திற்கே கல்வி புகட்டுவதாகும்.

- காமராசர்

❖ பகிர்ந்த துன்பம் பாதியாகிறது ..!
பகிர்ந்த இன்பம் இரட்டிப்பாகிறது..!

- மகாவீரர்

❖ மௌனம் மலையளவு சாதிக்கும். - கவிஞர் தமிழன்பன்

❖ அற்ப மனமுடையோரே
பழிவாங்கும் பண்புடையோர் ..! - சாக்ரடீஸ்

❖ பிறரைச் சீர்திருத்தும் கடமையை விடத்
தன்னைச் சீர்திருத்துவதே நம் முதல் கடமையாகும்.

- பெர்னாட் ஷா

❖ நீங்கள் மகிழ்ச்சியடைய விரும்பினால் - முதலில்
பிறர் மகிழ வழி செய்யுங்கள்.

- இங்கர் சால்

❖ நஷ்டமில்லாமல் வெற்றியில்லை !
முட்களில்லாமல் அரியணையில்லை !
முயற்சியில்லாமல் பெருமையில்லை!
சிலுவையில்லாமல் மகுடமில்லை ...!

- பொன்மொழி

❖ நீ விரும்புவதைச் செய்வதன்று
நீ செய்வதை விரும்புவதுதான் இன்பத்தின் இரகசியம்.

- ஜேம்ஸ் பார்க்

❖ ரோஜாச் செடியில் முள் இருக்கிறதே என்று குறைபடாதே ..!
முட்செடியிலும் அழகிய மலர் இருக்கிறதே
என்று அறிந்து மகிழ்ச்சி கொள்..!

- ஆவ்பரி

❖ பிறருக்காகச் செய்யும் மிகச் சிறு முயற்சியும் உள்ளிருக்கும் சக்தியை எழுப்புகிறது. பிறருக்காக வாழ்பவர்களே வாழ்பவர்கள்.

- சுவாமி விவேகானந்தர்

❖ உன் சொத்துக்களைக் கொடுக்கும்போது,
நீ கொடுப்பது குறைவானது,
உன்னையே நீ கொடுக்கும்போதுதான்,
உண்மையில் நீ கொடுப்பவனாகிறாய்.

- கலீல் ஜிப்ரான்

அருளாளர்கள்

பல்சமயங்களைச் சார்ந்த அருளாளர்கள் தங்கள் சமயத் திருமுறை நூல்களின் அருள் வாக்குகளைத் தியானித்து தங்களில் இறையாட்சி மலரவும் உலகில் இறையாட்சிச் சமூகம் மலரவும் பெருந் துணை செய்தனர்.

புத்தர்:

கருணை உள்ளம் கொண்டவர். துன்பம், துக்க காரணம், துன்ப நிரோதனம், துன்ப நிரோதன மார்க்கம் இவற்றை ஆழ்ந்து தியானித்து மக்கள் நல்வாழ்வு பெறக் காரணமாயிருந்தவர்.

அன்னை தெரசா

"ஏழைகளைப் புரிந்து கொள்ள ஏழையாகவே வாழும் பிரியப்படுகிறேன்". உடல் பொருள் ஆவி மூன்றும் ஏழைகளின் நல்வாழ்விற்காகவே அர்ப்பணித்தவள்.

திருவள்ளுவர் :

அறம், பொருள், இன்பம் என்ற மூன்று துறைகளிலும் மக்கள் நல்வாழ்வுக்காக அறநெறியைப் போதித்தவர்.



வள்ளலார் :

மனித நேயம், உயிர்க்கருணை (சீவ காருணியம்), சமய ஒருமை ஆன்ம நேய ஒருமைப்பாடு என்ற விழுமியங்கள் மக்களிடையே பரவத் தமது வாழ்வாலும் வாக்காலும் உழைத்தவர்.

குரு கோவிந்த சிங் :

சீக்கிய மரபின் பத்தாவது குருவான குரு கோவிந்தசிங்கின் இறைவணக்கப் பாடல்கள் ''ஜபம்'' என வழங்கப்படுகின்றன. அவரது துதிப்பாடல்கள் மனிதரை ஆன்மீகப் போராட்டத்துக்கும் வாழ்க்கைப் போராட்டத்துக்கும் தயார் செய்யும் ஆற்றல் கொண்டவை.

அசிசி அண்ணல் :

(பிரான்சிஸ்) இயற்கையோடு இணைந்தவர், விலங்குகளையும் பறவைகளையும் உடன் பிறப்புக்களாக மதித்தவர். மக்களிடையே அமைதி நிலவ உழைத்தவர். அவர் இயற்றிய அமைதிச் செபம் அன்பும் அருளும் நிறைந்த பேரிலக்கியம் ஆகும்.

கிளாரம்மாள் :

(1193 - 1253) அசிசி அண்ணல் பிரான்சிஸ் தவசியின் பொன்மொழி கேட்டு உடல், பொருள், பெருமை மீதுள்ள பற்றுதல்களைத் துறந்து இறைவனோடு ஒன்றிக்கும் தியானவாழ்வுக்குத் தம்மை அர்ப்பணித்தவர். ஏழைப் பெண்டிர் வாழ உழைத்தவர்.



காந்தியடிகள் :

நமது நாட்டுக்குச் சத்தியம், அகிம்சை மூலமாக விடுதலை பெற்றுத் தந்தவர். எளிய வாழ்க்கை, ஏழைகளின்மீது கரிசனையும் கிராமங்களின் முன்னேற்றமுமே இவரது முழு மூச்சாக அமைந்தது. சமய ஒருமைப்பாட்டின் சாட்சியாகத் தன் இன்னுயிரை நீத்தவர்.

நாராயண குரு :



கேரளத்தைச் சார்ந்தவர், சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அயராது உழைத்து வெற்றியும் கண்டவர். இறைநம்பிக்கையும் தாழ்த்தப்பட்டவர் விடுதலைக்கான போராட்டமும் ஒன்றிற்கொன்று முரணானவையல்ல என்று நிரூபித்தவர்.

ஆண்டாள் :

வைணவப் பெண்மணி, விஷ்ணுவின் அவதாரமான கண்ணன்மேல் தூய அன்பு கொண்டவர். பக்தி மார்க்கத்தின் அடையாளம்

அரவிந்தர் :

பாண்டிச்சேரியில் ஆசிரமம் அமைத்து ஆன்மீகம் வளர்த்தவர். அரவிந்தர் யோக சாதனங்களில் சிறந்தவர் , தத்துவ ஞானி, இளம் வயதில் நாட்டின் விடுதலைக்காகப் பெரிதும் உழைத்தவர்.



சுவாமி விவேகானந்தர் :

இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் முதன்மைச் சீடர். சிக்காகோவில் நடந்த சமயங்களின் மாநாட்டில் (பாராளுமன்றத்தில்) உரையாற்றிப் பல்சமய நல்லிணக்கத்தை வளர்த்தவர். இவரது எழுத்துக்கள் யாவருக்கும், சிறப்பாக இளைஞருக்கும் எழுச்சியூட்டக்கூடியவை.

சீரடி சாயி பாபா :

சீரடி சாயிபாபா ஒரு மகாகுரு.



இவ்வுலகில் அவர் வாழ்ந்த போது இறைவனுக்குத் தம்மை முற்றிலும் சரணாக தியாக்கினார். அதனோடு மக்களுடைய நல்வாழ்வுக்காகத் தம்மைத் தியாகம் செய்தவர். சாயி பாபாவின் சமயம் அனைவர்க்கும் அன்பு செய்தல் (Universal love). சாதி, இனம், மொழி, சமயம் கடந்த ஞான வாழ்வாகவே அவர் வாழ்வு அமைந்தது.

சமயங்களின் தத்துவங்கள்

இந்து சமயம்	:	''ஓம்'' என்ற இறைவாக்கு இறைவனாகக்கருதப்படுகிறது.
கிறித்தவ சமயம்	:	சிலுவையின் வழி மீட்பு, விடுதலை மற்றும் அன்பு என்கிறது கிறித்தவம்.
இசுலாமியத் தத்துவம்	:	இசுலாம் ஓரிறைக் கோட்பாட்டை வலியுறுத்தும் சமயம் ஆகும்.
யூத சதயம்	:	யூத சமயம் ஒரே இறைவன் கோட்பாட்டை வலியுறுத்துகிறது.
புத்த சமயம்	:	புத்த சமயம் ஆசையை வெறுத்து அருள் ஒளி பெறத் துணை செய்கிறது.
சமண மதம்	:	தவத்தின் வழி விடுதலை
சிண்டோ சமயம்	:	சிண்டோ சமயம் அன்பையும் நன்றியையும் வலியுறுத்தும் சமயமாகும்.
தாவோ சமயம்	:	மாறும் நேர்-எதிர்நோக்குகளும் தனி முதல் இறைவனில் ஒன்றாக உள்ளன.
சீக்கியச் சமயம்	:	அறவாழ்வு- நம்பிக்கை, ஒரே கடவுள் கொள்கை.
பார்சி சமயம்	:	தர்மம் தழைக்க, மெய் உலகாள சௌராஷ்டிரிய (பார்சி) சமயம். நல்லன வழி இறையருள் பெறுதல்

அய்யாவழி இயக்கம் :

குமரிமாவட்டத்தில் தோன்றிய சமய நெறி இது. இதனைத் தோற்றுவித்தவர் வைகுண்டசுவாமிகள். அவர் காலத்திய சமுதாய அநீதிகளுக்கு எதிராக அறவழி நின்று வெற்றி கண்டவர். அய்யா வழியில் அன்பு, சமத்துவம், நீதி போன்ற இறையாட்சிப் பண்புகள் சிறப்பிடம் பெறுகின்றன.

சமய அடையாளங்கள்

"ஓம்"

என்பது இந்து சமயத்தினர் அனைவரும் பொதுவாக ஏற்றுக்கொள்ளும் சமய அடையாளம் ஆகும். "இறையே போற்றி" என்பது இதன் பொருள் ஆகும். ஓம் என்னும் இதனை ''ஓங்காரம்'' எனவும் கூறுவர். ''பிரணவ'' என்பதற்கு ''எப்போதும் புதிதாகவே இருத்தல்" என்பது பொருள். ஓங்காரம் கடவுளின் சர்வ வல்லமையின் அடையாளமாக விளங்குகிறது.

"சிலுவை"

கிறிஸ்தவ சமயத்தின் அடையாளம். இலத்தின் மொழியில் இதை Crux என்றும், ஆங்கில மொழியில் Cross என்றும் அழைப்பர். இந்தச் சிலுவையில் இறை மகன் இயேசு அறையுண்டு மரித்து மூன்றாம் நாள், உயிர்த்தெழுந்தார் என்பது கிறிஸ்தவ நம்பிக்கை. கிறிஸ்துவின் சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் மூலமாக மீட்பு என்பது கிறிஸ்தவ நம்பிக்கை.

"வளர்பிறையும் நட்சத்திரமும்"

இஸ்லாமியத்தின் அடையாளம். நிலவு போல் குளிர்ச்சி தருவதும், நட்சத்திரம் போல் ஒளி வீசி வழிகாட்டுதலும் இஸ்லாமியத்தின் இயல்பாகும். வாழ்க்கைப் பயணத்தால் களைப்புற்ற உள்ளங்களுக்குக் கருணை புரிதலும், தடுமாறித் திரிகின்ற உயிர்களை நெறிப்படுத்தி இறைநெறி காட்டுதலும் இக்குறியீட்டால் புலப்படுத்தப் பெறுகின்றன.

"அறவழித் தருமச் சக்கரம்"



புத்த சமயத்தின் சின்னம். துன்பத்திருந்து விடுபடுதற்குரிய வழிகள். எண்கோண ஒழுக்க நெறி : நல்லநோக்கு, நல்ல தீர்மானம், நல்ல பேச்சு, நல்ல நடத்தை, நல்ல வாழ்வியல், நல்ல முயற்சி, நல்ல சிந்தனை, நல்ல தியானம், வாழ் வியல் துயரையும் அவை நீங்குவதற்கான முறையையும் சுட்டிக்காட்டுவதே தருமச் சக்கரம்.

"சுவஸ்திக்"

என்பது சமண சமயச் சின்னம். இது தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள், மேலுலகவாசிகள் என்னும் நான்கு வகை உயிர்களைச் சுட்டுவது ஆகும். இதிலுள்ள மூன்று புள்ளிகள் நற்சாட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் இவற்றைக் குறிக்கும். இவற்றின் வழியாகவே அனைத்து உயிர்களும் வீடுபேற்றை அடைய முடியும். முத்திரை பெற்ற உயிர்களின் இருப்பு நிலையை மேலே உள்ள புள்ளி குறிக்கிறது. எனவே அஞ்சாதே! (அபய முத்திரை)

"எரிதழல்"

பார்சி சமயச் சின்னமாகும். (சோராஸ்ட்ரிய சமயம்) அனைத்துத் தீமைகளையும் அழிக்க வல்லது நெருப்பு. "அதர்பேகரம்" என்னும் இவர்களது கோயில்களில் இந்நெருப்பு நிரந்தரமாய் எரிந்துகொண்டே இருக்கும்.

"வாளும் கேடயமும்"

குருநானக் முதல் குரு கோவிந்தசிங் வரையிலான பத்து சீக்கிய சமயக் குருக்களுக்குப் பின்வரும் குருவின் அடையாளமாக இருந்து சீக்கிய சமூகத்திற்கு வழிகாட்டி வருகின்றது. வீரவாள், கேடயம், குத்துவாள் (உடை வாள்) ஆகியவையும் சீக்கியத்தின் பிறிதொரு அடையாளம் ஆகும்.

"தோரி........வி"



என்பது ஜப்பானியரின் ஷிண்டோ என்னும் சமயச் சின்னமாகும். "ஷிண்டோ" என்பது "ஷெண்-தாவோ" என்னும் சொல்லிலிருந்து வந்தது. இதற்குக் கடவுளின் பாதை, இறைவனின் வழி என்பது பொருள்.

தாவோ

தனி முதலானது மாறக்கூடிய பன்மையில் மாறாத ஒருமையாக உள்ளது.... இதற்கு நேர் எதிராக உலகில் எல்லாப் பொருள்களும் எதிர் செயல்பாடுகளைக் கொண்ட "இன்" மற்றும் "யங்" ஒன்றின் மீதொன்று செயலாற்றுவதால் உண்டாகிறது. "இன்" என்பது எதிர்மறையான, பெண் தன்மை உடையதாகக் கருதப்படுகிறது. ''யங்'' உடன் பாடான, சுறுசுறுப்பான ஆண்தன்மை உடையதாகக் கருதப்படுகிறது.



தனி முதல் (கடவுள்) இரண்டு பகுதிகளை உள்ளடக்கிய வட்டமாகக் கருதப்படுகிறது.

ஏழு கிளை கொண்ட விளக்குத் தண்டு

(அறுகோண) விண்மீன் யூத சமயத்தின் அடையாளம் ஆகும். ஏழு முகம் கொண்ட விளக்குத் தண்டு இச்சமயத் தினைக் குறிக்கும் பிறிதொரு சின்னமாகும். இஃது இறைவன் ஏழு நாளில் உலகைப் படைத்ததை நினைவூட்டுவதாக அமைகிறது.

RELIGIOUS SYMBOLS

BAHAI


THAVOISM


SHINDYEISM

ஆண்டுத் திட்டம்

ஜூன்	:	தொடக்க விழா
ஜூலை	:	நம்மில் மனித நேயம் மலர ..!
		சமயங்கள் சங்கமிக்கட்டும் ...!
ஆகஸ்டு	:	உலக நட்பு தினம் (3 -ஆம் நாள்)
		சுதந்திர தினக் கொண்டாட்டம் (15-ம் நாள்)
செப்டம்பர்	:	உலக அமைதியும் நாமும்
அக்டோபர்	:	உலக சகோதரத்துவம் ... ! (அக்-4)
		தேசிய ஒருமைப்பாட்டு நாள் ...! (அக் -31)
நவம்பர்	:	தீபாவளி கொண்டாட்டம்
		ரம்சான் கொண்டாட்டம்
டிசம்பர்	:	கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டம்
ஜனவரி	:	பொங்கல் திருவிழா / தமிழ் புத்தாண்டு
		குடியரசு தினம் (ஜன 26)
பிப்ரவரி	:	பள்ளிக் கருத்தரங்கம்
		சிறார் அவைக் கலைவிழா
மார்ச்	:	ஆண்டு அறிக்கையினை ஒருங்கிணைப் பாளருக்கு அனுப்பி வைத்தல்

மாணவர் சேர்க்கைப் படிவம் (மாதிரி)

மாணவன் / மாணவி பெயர் : ....

வகுப்பு : .... பிரிவு : ....

பள்ளியின் பெயர் : ....

முகவரி : ....

சமயம் : ....

ஐயா!

வணக்கம்!

நான் கன்னியாகுமரி மாவட்ட திருவருட் பேரவையின் துணை அமைப்பான சிறார் அவையில் உறுப்பினராகச் சேர்ந்து அதன் நோக்கங்களை அறிந்து, அதன்படி நடக்க விரும்புகிறேன். எனவே என்னை சிறார் அவையில் (பல்சமய மாணவர் இயக்கம்) சேர்த்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி !

இடம் : .... இப்படிக்கு,

நாள் : ....

கன்னியாகுமரி மாவட்ட திருவருட்பேரவை சிறார் அவை மாணாக்கரின் விபரங்கள்

பெயர் : ....

வகுப்பு : .... பிரிவு : ....

பிறந்த நாள் : .... இரத்த பிரிவு : ....

சமயம் : ....

பள்ளியின் பெயர் : ....

முகவரி : ....

பெற்றோர் பெயர் : ....

முகவரி : ....

மாணவரிடம் காணப்படும் தனித் திறன்கள்:

↔ பேச்சுத் திறன்

↔ பாடல் பாடுதல்

↔ ஓவியம் வரைதல்

↔ கவிதை எழுதுதல்

↔ இதர -

-

-

-

பொழுதுபோக்குகள் :

தன்னிடம் பிடித்த குணங்கள் :

எதிர்கால இலட்சியம் :

மாணவர் கையொப்பம்

தமிழ்த்தாய் வாழ்த்து

(பண் : மோகனம்)

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

-மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை

நாட்டுப் பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

- மகாகவி இரவீந்திரநாத தாகூர் (1912)

தலைவர் மேதகு ஆயர் டாக்டர் பீட்டர் ரெமிஜியூஸ்
நன்கொடையாளர் திரு. எம். எம். செல்வராஜ் MJF
ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை அ. மரிய வின்சென்ட் அடிகள்

தொடக்க விழா
THE PIONEER SCHOOL

No: 04652-231085